பெருந்தோட்டத் தொழிலாளரின் எதிர்காலம்

B.A. காதர்

320·5
காதர்

# பெருந்தோட்ட தொழிலாளரின் எதிர்காலம் ?

3/20.

INDEPENDENT COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

1

...லாளர் கல்வி வெளியீடு
...கத் தொழிலாளர் காங்கிரஸ்
...னந்தகுமாரசாமி மாவத்தை
கொழும்பு - 7.

320.5
காதர்

EVELYN RUTNAM INSTITUTE
270
REFERENCE LIBRARY
320.57
காத
1786

# பதிப்புரை

பெருந்தோட்ட தொழிலாளரின் எதிர்காலம்? என்கின்ற தலைப்பில் 2-8-1981 தலவாக்கொல்லை இ. தொ. கா. அரசியல் அங்க காரியாலயத்தில் நடைபெற்ற முதலாவது தொடர் கருத்தரங்கில் ஆசிரியர் திரு. B. A. காதர் அவர்கள் சமர்ப்பித்துப் பேசிய கட்டுரையின் நூல் வடிவம் தான் இந்த வெளியீடு.

ஒரு சில புள்ளி விபரங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்ட பொழுதிலும் கருத்துக்களில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை. மலையகம் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இக்காலகட்டத்தில் அம்முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு, மலையக மக்களை முழுமையாகப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு ஜனநாயக இயக்கம் என்கின்ற வகையிலே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தொழிலாளர் கல்விப் பிரிவுக்கு நடுவு நிலைமையில் நின்று இக்கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்ற கடமை உண்டு என்கின்ற காரணத்தினால்தான் இக்கட்டுரைக்கு நூலுருவம் கொடுக்கப்படுகிறது.

விலைமதிப்பற்ற ஆராய்ச்சியை மேற்கொண்டு எமது முதலாவது கருத்தரங்கில் அதைச் சமர்ப்பித்ததும், தொடர்ந்து நூலுருவில் எழுதித்தந்தும் உதவிய நண்பர் பி. ஏ. காதர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, மலையக மக்கள் சம்பந்தமான அவரது சகல முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

இதுபோன்ற பலரது பல்வேறு முயற்சிகளை நாம் எதிர்பார்த்து நிற்கிறோம்.

நன்றி

வ. நாகலிங்கம்
தொழிலாளர் கல்வி இயக்குனர்

72, ஆனந்தகுமாரசாமி மாவத்தை,
கொழும்பு - 7.

இப்பிரசுரம் திரு. வ. நாகலிங்கம் அவர்களுக்காக தெல்லிப்பழையில் உள்ள குகன் அச்சகத்தில் 10 - 10 - 1981 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY

# மலையகத் தமிழரின் எதிர்காலம்?

— B. A. காதர் —

**கட்டுரையின் நோக்கம்:-**

மலையகத் தமிழர் தென் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக வெள்ளையரால் வஞ்சகமான முறையிலே வரவழைக்கப்பட்டவர் என்ற வரலாற்றுக் காரணத்தால் அவர்களது தேசிய உரிமையை மறுக்கும் பல்வேறு சித்தாந்தங்கள் நிலவுகின்றன.

ஒரு சாரார் "அவர்களது தாயகம் இந்தியா — அவர்களை இந்தியாவுக்கே திருப்பி அனுப்பவேண்டும்" என்கின்றனர். இன்னொரு சாரார் "அவர்கள் இந்தியா சென்றால் பெருந்தோட்டம் காடாகிவிடும். ஆகவே அவர்கள் இலங்கையிலே இருக்கட்டும். ஆனால் அவர்களுக்கு அரசியல் உரிமையோ, தேசிய உரிமையோ வழங்கக்கூடாது" எனக் கூறுகின்றனர். மற்றொரு சாரார் "பாவம் அவர்களை விரட்ட வேண்டாம். மனிதாபிமானத்துடன் நடத்துங்கள்!" என வள்ளல் மனோபாவத்துடன் போதனைப் புரிகின்றனர்.

இந்த மூன்று கண்ணோட்டங்களும் சாராம்சத்தில் "இன ஆதிக்கவாத" (*Chauvinism*) கருத்துக்களே, விஞ்ஞானத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் முரணான இக் கருத்துகளுக்கு சாவு மணி அடிக்க வேண்டுமானால் மலையக தமிழர் இலங்கையின் தேசிய இனத்தவரில் ஒருவர், அவர்களை இரண்டாந்தர, மூன்றாந்தரப் பிரஜைகளாகக் கருதவோ, சர்வசமத்துவத்துடன் ஏனைய தேசிய இனங்களுடன் சரிநிகராக மதிக்கப்படுவதைத் தடுக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது என்பதை நிரூபித்தாகவேண்டும். அந்த சவாலை இக்கட்டுரை ஏற்று மூன்று கருத்தோட்டங்களை நிறுவ முயல்கிறது.

முதலாவதாக, மலையகத் தமிழர் இலங்கையின் தேசிய இனத்தவர் என்பதையும், இரண்டாவதாக, மலையகத் தமிழர் தமிழ் மொழியைப் பேசியபோதும் ஏனைய தமிழ் பேசும் மக்களில் இருந்தும் வேறுபட்ட தனியான ஒரு தேசிய இனம். அவர்களது தனித்துவத்தை அங்கீகரிக்க மறுப்பதுகூட "இன ஆதிக்க" வாதத்தின் வெளிப்பாடே என்பதையும், மூன்றாவதாக, மலையகம் அவர்களது தாயகம். மலையகத்தின் சொந்தக்

காரர் மலையகத் தமிழரே என்பதையும், வரலாற்று ரீதியாக வும், தத்துவார்த்த ரீதியாகவும், தர்க்கரீதியாகவும் நிரூபிக்க முயல்கிறது. அத்துடன் மலையகத் தமிழர் இந்தியா செல்வதா? வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு இடம் பெயர்வதா? மலைய கத்தில் நிலைத்து தேசிய உரிமைக்காகவும், பிரதேச உரிமைக் காகவும் குரல் கொடுப்பதா? ஆகிய வினாக்களுக்கும் விடைய ளிக்கிறது.

## அத்தியாயம் ஒன்று

### தேசிய இனம் என்றால் என்ன?

**(அ) தேசிய இனம் என்பது ஆதிமானிட இனமல்ல (*Race*)**

சுற்றியுள்ள இயற்கையுடனான உறவால் நிர்ணயிக்கப்பட்ட குறித்த உடலமைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்த ஆதி மானிட இனத்தை மூன்று பெரும் பிரிவுகளாக மானுடவிய லாளர் வகுத்துள்ளனர். அவையாவன : (1) கோகசொயிட் வெள்ளை ஐரோப்பியவகையினம் (2) மங்கலோயிட் - மஞ்சள் மங்கோலிய வகை இனம் (3) நீக்ரொயிட் - கறுப்பு, நீக்ரோ வகை இனம்.

இவ் இனங்களுக்கிடையிலான வேறுபாடு உடலமைப்பின் வெளித்தோற்றத்தில் காணப்படும் வித்தியாசங்கள் மாத்தி ரமே இரத்த, நரம்புமண்டல தொகுதிகளிலோ, திறமையிலோ எவ்வித வேறுபாடும் கிடையாது. என்பதை விஞ்ஞான ரீதி யான ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஆயினும் சில "இன ஆதிக்க வாதிகள்" ஏகாபத்திய நோக்கங்களுக்காக "உயர்ந்த இனம்" "தூய இரத்தம்" போன்ற விஷம் தோய்ந்த கருத்துக்களை செயற்கையாக நிறுவ அவ்வப்போது முயற்சி செய்துள்ளனர். இன்றும் முயற்சி செய்கின்றனர். செம்பர்லேய்ன் (*Chamberlain*) கோபினோ (*Gobineau*) போன்றோர் இத்தகைய ஏகாபத்திய சித்தாந்த வாதிகளே.

இயற்கைத் தடைகளை (உ-ம்; கடல், மலை, காடு, சேற்று நிலம், பாலைவனம்) வெல்லும் ஆற்றலை மனிதன் பெற்றிராத காலத்தில் சுற்றாடலின் கதிர்வீச்சு, காற்றின் ஈரிப்பு முதலிய இயற்கை காரணிகள் ஒதுக்கப்பட்ட மனித இனத்திடையே

துலக்கமான அங்க அடையாளங்களை பதிவுறச் செய்தன. உணவின் ஊட்டமுறை வேறுபாடுகளும் சேர்ந்து பரம்பரை அலகின் (*Genetics*) செல்வாக்கினுல் இவ்வேறுபாடுகள் அழுத்தம் பெற்றன. அவ்வினங்களிடையே நிலவிய சிறப்பான அங்க அடையாளங்கள் பின்வருமாறு தெட்டத்தெளிவாக் காணப்பட்டன.

1. **நீக்ரோயிட் :** (உலக சனத்தொகையில் 10%)

இவ் வினத்தவரின் தோல், மயிர், கண் ஆகியவை கருமையாக இருக்கும். தலை மயிர் நெருக்கமாகச் சுருண்டோ, அலை படிந்ததாகவோ இருக்கும். முகத்தாடை அகன்றும், மேல் தாடை சற்று வெளி பிதுங்கியும் காணப்படும். அகன்ற மடலும் குறைந்த வளர்ச்சியும் கொண்ட மூக்கின் துவாரம் அகலமாக இருக்கும் உதடு தடிப்பாக இருந்தாலும் மேல் உதடு பிதுங்கியும் வாய் பிளவு அகன்றும் இருக்கும். உடலுடன் ஒப்பிடும்போது கால்கள் நீளமாகக் காணப்படும். நீகெர் என்ற லத்தீன் சொல்லுக்கு கறுப்பு என்று பொருள். இதன் அடிப்படையில் பிறந்த சொல்லே நீக்ரோ.

2. **மங்கலோயிட் :** (மொத்தச் சனத்தொகையில் 37%) -மஞ்சள்

இவ் வினத்தவரின் தோல் மஞ்சள் நிறமாக இருக்கும். கருமை நிறமான தலைமயிர் விறைப்பாகவும் நேராகவும் இருக்கும். இவர்களது முகத்தில் தாடியும் மீசையும் காலங்கழித்து அடர்த்தியின்றி வளரும்! கன்ன எலும்பு புடைத்து இருப்பதால் முகம் தட்டையாகத் தோன்றும். உதடுகள் மெல்லியவையாகவும் நடுதரமான மூக்கு குறைவாக முன்னுல் நீட்டியவாறும், மூக்குப் பொருத்து (*Nosejoint*) தாழ்ந்தும் காணப்படும்.

**இணைப்பு :**

இவர்களது கண்கள் ஏனைய இனங்களிலும் பார்க்க பெரிதும் வேறுபடுகின்றன; வெளிர் நிறத்தையுடைய விழிகள் நேராகக் காணப்படாமல் மூக்கின் அருகிலே கன்னக்குழிக்குள் தாழ்வாகவும் நெற்றிப்பொட்டின் ஓரத்தில் உயர்ந்தும் விளங்கும். அத்துடன் மேல் இமை கண்ணின் உள் ஓரத்தையும் கண்ணீர் சுரப்பியையும் மூடி இருப்பதால் விழிகள் பாதி உறக்கம் கொள்வது போலத் தோன்றும்.

3. **கோகசொயிட்:** (உலக சனத்தொகையில் 53%) -வெள்ளை

இவர்களின் தோல் வெளுப்பாகவும் முகத்தில் ரோஜா நிறச் சாயல் படிந்தும் இருக்கும். தலைமயிர் மென்மையாக, பல நிறங்களில், அலைபடிந்தோ, நேராகவோ இருக்கும். தாடியும் மீசையும் அடர்த்தியாக வளரும் நெற்றி நேராகவோ சரிந்தோ காணப்படும். முகத்தின் நடுப்பகுதி, மூக்கின் அடிக்கும் உதடுக்கும் இடையே உள்ள பகுதி (காது வரை), வெகுவாக முன்னால் உப்பி இருக்கும். கன்ன எலும்பு குறைவாக புடைத்திருக்கும். தாடை நீளமற்றது. விழிகள் பெரும்பாலும் தவிட்டு நிறமாகவோ வெளிறிய சாம்பல் நிறமாகவோ, நீலமாகவோ, இள நீலநிறமாகவோ காணப்படும். மூக்கு குறுகலாகவும் முன்னால் வெகுவாக பிதுங்கியும் மூக்குப் பொருத்து உயரமாகவும் இருக்கும். உதடு மெல்லியதாக இருக்கும்.

இத்தகைய அங்க வேறுபாடுகளுடைய தனி நபர்களை வேண்டுமானால் இன்றும் கூட ஆங்காங்கே காணமுடியும் ஆனால் இத்தகைய அங்கலட்சணங்களை உடைய, கலப்பில்லாத ஒரு மக்கள் கூட்டத்தை உலகின் எந்த பாகத்திலும் இன்று காண முடியாது. ஏனெனில் இயற்கைத் தடைகளையும் ஒதுக்கல் நிலைமைகளையும் இன்றைய மனிதகுலம் வெற்றி கொண்டு இரண்டறக் கலந்து வருகிறது. நவீன போக்குவரத்து வசதிகளாலும், பொருளாதார தொடர்புகளாலும் இன்றைய உலகம் வெகுவாகச் சுருங்கிவிட்டது. எத்தகைய கால நிலையையும் சமாளிக்கக்கூடிய வசதியை விஞ்ஞானம் வழங்குகிறது. வெப்பமண்டலத்தில் வாழும் குளிர் தேசத்தவனுக்கு ஏயர்கண்டிஷனையும், குளிர்பிரதேசத்தில் வாழும் வெப்ப வலய நாட்டுக்காரனுக்கு வெப்ப மேற்றும் ஆடைகளையும் அது நல்குகிறது. எனவே ஒதுக்கல் நிலையிலே கலப்பின்றி, தொடர்பின்றி வாழ்ந்த எஸ்கிமோவர் போன்ற மக்கள் கூட்டத்தவரிடையே கூட இன்று இனத்தூய்மை அல்லது தனித்துவமான உடலமைப்பு மறைந்து வருகிறது. சகல மக்களையும், மிக நெருக்கமாக பிணைத்து நவீன பொருளாதாரம் அரைத்துக் கலக்குகின்ற இன்றைய போக்கின் ஓட்டத்தால் இந்த இன பாகுபாடு மறைந்து வருகிறது. எதிர் காலத்தில் இவ்வேறுபாடு அறவே இல்லாமல் போய்விடும். மனித ஜீன்ஸில் உள்ள டி என் ஏ (*D N A*) அமிலத்தை மாற்றும் வழியை எதிர்காலத்தில் விஞ்ஞானம் கண்டு பிடிக்கும். அப்போது நிறவேறுபாடுகள் அழிந்துபோகும். உணவின் ஊட்ட முறைகள் மேலும் விருத்தியுற்று உடல் வளர்ச்சியின் வேறுபாடுகள் மங்கிப்போகும் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

சுருக்குவோம் :

(1) இயற்கைத் தடைகளை வெற்றிகொள்ள முடியாமல் இருந்த காலத்தில் ஒதுங்கிய பிரதேச சூழல்களில் மனிதன் சிறைப்பட்டு வாழ்ந்தபோது வெப்பநிலை மாற்றத்திற்கும், காற்றின் ஈரிப்பிற்கும் ஏற்ப அவனது நிறம் வேறுபட்டது. வெயிலில் தொடர்ந்து வேலை செய்யும்போது தோல் கறுக்கிறது. இதுபோல தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக வெப்ப மண்டலத்தில் வாழ்ந்தோரின் சருமத்தில் கறுப்பு நிறம் அழுத்தம் பெற்றது. பரம்பரை அலகின் செல்வாக்கும் இப் போக்கில் செல்வாக்குச் செலுத்தியது. பிரதேச ஒதுக்கல் முறைக்குள்ளாகி இருந்த மனிதன் அவன் வாழ்ந்த சூழலில் கிடைத்த உணவையே உட்கொண்டான். எனவே ஊட்ட முறைவேறுபட்டது. இதுவே உடல் வளர்ச்சியிலும் வேறுபாடு ஏற்பட காரணமாகியது. பிரதேசத்திற்கு பிரதேசம் தொழில் முயற்சிகள் வேறுபடுவதும் அங்க அமைப்பின் வேறுபாட்டுக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

(2) இவ்வாறு பிரதேசச் ''சிறைகளில்'' அடைப்பட்டு வாழ்ந்த மனிதனின் புறத்தோற்றத்தில் அவன் வாழ்ந்த சுற்றுடலினதும், சமூக வாழ்க்கையினதும் தடையங்கள் அழுத்தமாகவும் திட்டவட்டமாகவும் பதிவுற்றன; **இந்த புறத்தோற்றத்தின் அடிப்படையில் மனிதகுலம் மூன்று மானிட இனங்களாக பாகுபட்டிருந்தது. இதுவே இனம்.**

(3) இன்றைய நவீன பொருளாதார உறவு முறைகளால் இயற்கை தடைகள் முற்றாக நீக்கப்பட்டுவிட்டன. இன்று மனிதனின் உயிரியல் காரணிகளைவிட சமூக பொருளாதார காரணிகளே செல்வாக்கு செலுத்துகின்றன. எனவே தான் மனிதன் சமூகப் பிராணி எனப்படுகிறான். உலகின் எந்த மூலையிலும் கலப்பில்லாத் தூய இனத்தைக் காணமுடியாதபடி இன்று மக்கள் இரண்டறக் கலந்து வருகின்றனர். **திட்டவட்டமான புறத்தோற்றத்தை உடைய மக்கள் கூட்டமே இனம்.** முன்னர் விபரித்த அங்க அடையாளங்களால் பகுத்தறியக்கூடிய தனிமக்கள் கூட்டத்தை, இனத்தை இன்று எங்கும் காணமுடியாது. அது மாத்திரமல்ல அத்தகைய புறத்தோற்ற வேறுபாடுகளின் அடிப்படையில் இன்று எந்த மக்கள் கூட்டமும் வேறுபட்டு, பிணைந்து, இணைந்து வாழவில்லை. வாழவும் முடியாது. எனவே, '' இனம் '' இன்று பொருளற்றுப் போய்விட்டது. நூதனசாலையில் வரலாற்று மகிமைக்காக கண்காட்சிக்கு வைக்கவேண்டிய சொல்லாக அது மாறிவிட்டது.

**(ஆ) தேசிய இனம் என்பது மொழி, கலாச்சாரக் குழுக்கள் அல்ல**

"ஆரியர் உயர்ந்த இனத்தவர்." உயரமான மேனியும், இளநீல விழிகளும், வெளிர் மயிரும் கொண்ட நார்டிக் இனத்தவரே. "தூய இரத்தமுள்ள ஆரியர்" என்ற கருத்துத்தான் நாசிசத்தின் கருவாக அமைந்து உலக நாசத்திற்குக் காரணமாகியது.

இன்றும் கூட "கலப்பில்லாத தூயமொழி" "பிற மொழிகள் கலக்காமல் தனித்து இயங்கக்கூடிய மொழி" எனப்பெருமை பேசும் மொழி வெறியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வரலாற்றின் அரிச்சுவடிதானும் அறியாதவர்கள். ஆதியில் மனிதன் சிறு குழுக்களாக வாழ்ந்தபோது அவனது மொழி வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. சமூக வளர்ச்சியுடன் ஒட்டியே மொழியும் வளர்ந்தது. சிறு சமூகக்குழுக்கள் இரண்டறக் கலந்து பெரும் குழுக்கள் தோன்றின. இவற்றிடையே மொழிகள் கலந்து பொதுமொழிகள் உருவாகின. இத்தகைய மொழிகளையே இன்று நாம் காண்கிறோம். இன்று கலப்பில்லாத எந்த மொழியையும் எந்த நாட்டிலும் காணமுடியாது. எதிர்காலத்தில் முழு உலகும் ஒரே மொழியால் மக்கள் பேசும் யுகம் உருவாகத்தான் போகிறது. அப்போது சகல மொழிகளின் சிறப்பான பகுதிகளையும் அந்த உலகப் பொதுமொழி தனக்குள் சங்கமமாக்கிக் கொள்ளும். இனி விடயத்திற்கு வருவோம்.

"திராவிடம்", "ஆரியம்" இவையாவும் மொழிக் குடும்பங்களின் பெயர்கள். இத்தயை பத்துக்கும் அதிகமான மொழிக்குடும்பங்கள் ஆசியாவில் மாத்திரம் காணப்படுகின்றன. இனம் என்பது உடலின் புறத்தோற்றத்தால் வேறுபட்ட மக்கள் கூட்டத்தைக் குறிப்பது. ஆனால் மொழியோ அவ்வாறு அல்ல. எனவே மொழியையும், இனத்தையும் முடிச்சுப்போட நினைப்பது விஞ்ஞானத்திற்கும், யதாத்தத்திற்கும் முரணான செயலாகும்.

இனத்தை மொழியுடன் கலக்கும் முயற்சி சிறுபிள்ளைத் தனமானது என்பதை பின்வரும் உண்மைகள் விளக்குகின்றன. ஒன்று பல "இனக் கலப்புக்குழுக்கள்" *(Ethnic groups)* ஒரே மொழியைப் பேசுகின்றன. இதற்கு "ஆரிய தூய்மை" பற்றி பேசிய ஜெர்மனி சிறந்த உதாரணம். ஜெர்மன் மொழியைப் பேசும் ஜெர்மனியர்களில் ஆறு மாறுபட்ட "இனக்கலப்புக் குழுக்களை" மானுடவியலாளர்கள் வகைப்படுத்தியுள்ளார்கள் இரண்டு) ஒரேவகை "இனக்கலப்புக் குழுக்கள்," பல மொழிகளைப் பேசுகின்றன. நீக்ரோ மக்கள் ஆபிரிக்காவிலே தங்கள் தாய்மொழியில் பேசும்போது வட அமெரிக்காவிலே ஆங்கில

மும், தென் அமெரிக்காவிலே ஸ்பானிய மொழியும் பேசுகிருர்கள். மூன்று, பல்வேறு மொழிக் குடும்பங்களுக்கிடையே கலப்புகள் நடந்தேறியுள்ளன. உதாரணத்திற்கு ஒன்றைத் தருவோம்: பல இந்திய மொழிகளும், பாரசீக மொழியும் ஐரோப்பிய மொழிகளுடன் ஒற்றுமை அம்சங்கள் கொண்டிருப்பதை மொழியியல் ஆராய்ச்சி நிரூபித்துள்ளது. நான்கு, மொழி அடிப்படையில் இன்று மக்கள் ஒரு திட்டவட்டமான கூட்டமாக இணைந்து வாழவில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா, அயர்லாந்து, அவுஸ்திரேலியா; இங்கெல்லாம் மக்கள் ஆங்கில மொழியைப் பேசிய போதும் அரசின் எல்லைகள் அல்லது கலாச்சார வேறுபாடுகள் போன்ற காரணங்கள் இவர்களைப் பிரித்துக் காட்டுகின்றன. ஒரே மொழியைப் பேசுகின்ற ஐரிஸ்காரரும் இங்கிலாந்துக்காரரும் வெவ்வேறு தேசிய நலன்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கிருர்கள்.

எனவே திராவிடர் ஆரியர் போன்ற மொழி இனப்பாகுபாடு விஞ்ஞானத்திற்கு முரணுனது; பைத்தியக்காரத் தனமானது. அதே போல மத, கலாச்சார அடிப்படையிலும் இன்று மக்கள் திட்டவட்டமாக வகைப்படுத்தவோ, ஒன்றுபடுத்தவோ முடியாது. மத்திய கிழக்கை எடுத்துக் கொள்ளுங்கள், ஒரே மதத்தை வழிபடுகின்ற பல அரசுகளில் அருகருகே வாழும் முஸ்லீம்களை நாடுகள், அரசின் எல்லைகள் பிரிக்கின்றன. கிறிஸ்தவர்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிருர்கள். ஆனுல் அவர்கள் ஒரே மொழியைப் பேசவில்லை. ஒரே "இனக் கலப்புக் குழுவாக" இருக்கவில்லை. இது ஏனைய எந்த மதத்திற்கும் பொருந்தும். எனவே மத, மொழி அடிப்படையிலும் மக்களை ஒன்றிணைக்க இயலாது. அப்படியானுல் எந்த அடிப்படையில் இன்று மக்களை வகைப்படுத்துவது? ஒன்றிணைப்பது?

ஒரே ஒரு விடைதான் இதற்குக் கிடைக்கும். அது தேசத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய இனங்களாக மாத்திரமே இன்று மக்களை வகைப்படுத்தமுடியும். தேசிய இனம் என்ருல் என்ன?

**(இ) தேசிய இனம் என்பது வரலாற்று ரீதியான மக்கள் கூட்டம்:**

"நாம் ஏனைய மக்களில் இருந்து வேறுபட்ட, திட்டவட்டமான மக்கட் கூட்டம்" என்ற உணர்வே ஒரு மக்கள் குழுவை பிறமக்கள் கூட்டங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்த உணர்வு ஏற்படுவதற்கு அந்த மக்கள் குழு ஒரு பொதுவான வாழ்வினுல் ஒன்றுபட வேண்டும். மிக நெருக்கமான பிணைப்புகளும் பொதுவான நலன்களும் அவர்களை ஒன்று திரட்ட வேண்டும். நான்கு சங்கிலிகள் இந்த பிணைப்பை ஏற்படுத்துகின்றன. அவையாவன:- I. ஒரு மொழி II. ஒரு பிரதேசம் III. ஒரு கலாச்சாரம் IV. ஒரு பொது பொருளாதாரம்.

ஒரு திட்ட வட்டமான, நிலையான அரசின் எல்லைக்குட் பட்ட பிரதேசத்தில் அதாவது தேசத்தில் வாழ்ந்து அதன் மத்தியத்துவப்பட்ட பொருளாதார சங்கிலியால் பிணைக்கப் பட்டு ஒரு மொழியாலும் ஒரே கலாச்சாரத்தாலும் இணைந்து வாழும்போதுதான் ஒரு மக்கட் கூட்டத்தால் ஒரு பொது வான வாழ்வை பகிர்ந்து கொள்ளவும் ''நாம் ஒரு தனியான மக்கட் கூட்டம்'' என்று உணரவும் முடியும்.

பிரித்தானியாவிலிருந்து தான் ஆங்கிலேயர் அமெரிக்கா சென்று குடியேறினர்கள். ஆரம்பத்தில் இரண்டுமே ஒரே தேசமாகத்தான் கருதப்பட்டது. ஆனல் இன்று இவ்விரு தேசத் தவரும் தனித்தனி தேசிய இனங்கள். ஒரே மொழியைப் பேசி இப்போது கலாச்சார வேறுபாடு காணப்பட்டாலும், ஆரம்ப காலத்தில் ஒரே கலாச்சாரத்தைக் கொண்டிருந்த இவர்கள் இன்று நாம் வெவ்வேறு தேசிய இனத்தவர், வெவ்வேறு வித மான வாழ்வைப் பகிர்ந்து கொள்பவர் எனக் கருதுவது எத ஞல்? தமது பிறப்பிடமான பிரித்தானியாவுக்கெதிராக அமெரிக்கா '' சுதந்திரப்போர் '' தொடுத்ததற்குக் காரணம் என்ன?

முதலாவதாக பிரித்தானியாவையும், அமெரிக்காவையும் இணைத்து இரு மக்களையும் இறுகப் பிணைந்து ஒரு பொதுவான வாழ்வைப் பகிர்ந்து கொள்ளச்செய்யும் ஒரு மத்தியத்துவப் படுத்திய பொருளாதாரம் வலுவுடன் திகழவில்லை. இரண்டா வதாக, அமெரிக்கருக்கு தமது தாயகமான பிரித்தானியாவுட னுள இரத்த உறவு படிப்படியாக இல்லாமற் போய்விட்டது. மூன்ருவதாக, பிரித்தானியாவின் ஏகாதிபத்திய தன்மை அதன் பிடியிலிருந்து விடுபடவேண்டுமென்ற சுதந்திரத் தாகத்தை தட்டி எழுப்பிவிட்டது. எனவே அமெரிக்கா பிரித்தானியாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டது. இன்று எப்படி தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் குடியமர்ந்த மலையகத் தமிழர் இலங்கை அரசின் எல்லைக்குள் வாழ்ந்து இலங்கைப் பொருளாதாரச் சங்கிலியால் பிணைந்திருக்கும் காரணத்தால் தென்னிந்திய தமிழர்களில் மாறுபட்ட ஒரு வாழ்க்கை முறையை மேற்கொள்கிருர்களோ, எவ்வாறு இவ்விரு சாரா ரும் ஒரு பொதுவான வாழ்வைப் பகிர்ந்துகொள்ளவில்லையோ அவ்வாறே இங்கிலாந்துக்காரரும், ஆங்கிலேயரும் இருவேறு மக்கள் கூட்டங்களாக, இரு தேசிய இனங்களாக மாறிவிட்ட னர். காரணம் ஒன்று, இவ்விருவரும் இரு வேறுபட்ட அரசின் எல்லைக்குள், இரு தேசங்களில் வாழ்கின்றனர். இரண்டு, இவ் விரு தேசத்தின் பொருளாதார வாழ்வும் வெவ்வேருனவை.

சிலர் தேசிய இனம் என்பது மனிதகுலம் தோன்றிய காலத்தில் இருந்தே நிலவி வந்துள்ளது என தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் மத்தியகால பிளவுகளுக்கு நவீன கைத்தொழிற் புரட்சியால் உதயமாகிய முதலாளித்துவம் முற்றுப் புள்ளி வைத்த பின்னரே தேசிய இனம் உருவாகியது.

தேசிய இனம் என்பதன் பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்காகவும், இன்று சிலர் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்தனியான பொருளாதாரம் இருக்க வேண்டுமென விதண்டாவாதம் புரிவதற்குத் தண்டனையாகவும் இலங்கையின் உதாரணத்துடன் தேசிய இனத்தின் தோற்றத்தைப் புரிந்துகொள்வோம்.

பிரித்தானியரால் இலங்கை ஒன்றிணைக்கப்படு முன்னர் "இலங்கை" என்பது திட்டவட்டமான ஒரு நாட்டின் பெயராக இருக்கவில்லை; மாறாக அடிக்கடி மாறிக்கொண்டிருந்த எல்லைகளையுடைய பல்வேறு அரசுகளின் கூட்டுத்தொகுப்பாகவே அது நிலவியது. போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்தபோது இலங்கை, கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று ஆட்சிப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. கோட்டை இராச்சியம் ரயிகம, சீதாவக்க, கோட்டை என மூன்று அரசுகளாகவும், கண்டி இராச்சியம் பல்வேறு கோறளைகளாலும், யாழ்ப்பாண இராச்சியம் பல வன்னி அரசுகளாலும், பிளவுண்டிருந்தது. அன்று நிலவிய மத, மொழி, அரசு வேறுபாடுகளை அவ்வப்போது அரசர்கள் தமது "நிலக்கொள்ளை" யுத்தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாலும், ஒரு நிலப்பரப்பின் அடிப்படையிலோ, மத, மொழி அடிப்படையிலோ மக்கள் இணைந்து வாழவில்லை; வாழ்ந்திருக்கவும் முடியாது.

அரசனுக்கு விசுவாசமாக இருத்தல் வேண்டும் என்ற சித்தாந்தமே மத்தியகாலத்தில் மேலோங்கி இருந்தது. எனவே அரசர்களே மக்களை ஒன்றுபடுத்தும் சின்னமாகத் திகழ்ந்தார்கள். கோட்டை இராச்சியத்தை எடுத்துக்கொள்வோம் சீதாவக்க அரசனின்கீழ் வாழ்ந்த சிங்கள மக்கள் ரயிகம அரசனின் கீழ் வாழ்ந்த சிங்கள மக்களை தம்மவராகக் கருதவில்லை. ரயிகம சீதாவக்க அரசனால் வெற்றிகொள்ளப்பட்ட பின்னர் அதுவரை ரயிகம அரசனின் குடிகளாக வாழ்ந்தோர் சீதாவக்கை அரசனின் விசுவாசமான பிரஜைகளாயினர். சீதாவக்க, ரயிகம சிங்கள மக்கள் கோட்டை அரசனின் கீழ் அணிதிரண்ட

சிங்கள மக்களுடன் போராடினர். கண்டி அரசனின் கீழ் வாழ்ந்த சிங்கள மக்களுக்கும் இவர்களுக்கும் நெருக்கமான பிணைப்பு இருக்கவில்லை.

இவ்வாறுதான் சகல நாடுகளிலும் மத்திய காலத்தில் மக்கள் பிளவுண்டிருந்தனர். அவர்களிடையே நெருக்கமான இணைவு ஏற்படுவதற்குரிய சூழலை அப்போது நிலவிய "கிராமிய சுயதேவைப் பொருளாதாரம்" இல்லாமற் செய்துவிட்டது. ஏனெனில் அன்று ஒவ்வொரு கிராமமும் தனித்தே தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டது. எனவே ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் இடையே மிக அரிதாகவே தொடர்பு ஏற்பட்டது. மேலும் இன்றிருப்பதைப் போன்ற நவீன போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகளை அன்றைய உலகம் பெற்றிருக்கவில்லை. அதாவது:-

ஒன்று) அன்று அரசின் எல்லைகள் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தன; எனவே நிலையான தேசங்கள் உருவாகவில்லை. இரண்டு) அன்று நிலவிய கிராமிய சுயதேவைப் பொருளாதாரம் முழுமக்களையும் இணையவிடவில்லை. மூன்று) ஒரே வகையான மக்கட் கூட்டமே பல்வேறு அரசர்களின் தலைமையில் பிளவுண்டு தமக்குள் போராடிக்கொண்டிருந்தது. எனவே அன்று நிலையற்ற, மேலோட்டமாக இணைக்கப்பட்ட மக்கள் குழுக்கள் இருந்தனவே ஒழிய (*Loosely - connected, casual or ephemerat conglomeration of groups*) நிலையான திட்டவட்டமான மக்கள் கூட்டங்கள் வாழவில்லை. அவர்கள் ஒரு பொதுவான வாழ்வைப் பகிர்ந்துகொள்ளவில்லை.

முதலாளித்துவப் புரட்சிதான் இந்த வரலாற்றுப்பணியைச் செய்தது. முதலாவதாக, அடிக்கடி மாறிய மத்தியகால நிலப் பிளவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அரசின் எல்லைகளைத் திட்டவட்டமாக வகுத்து தேசங்களை முதன்முதலாக உருவாக்கியது. இரண்டாவதாக, கிராமிய சுயதேவைப் பொருளாதாரத்தால் சிறுசிறு அலகுகளாக (*Units*) ஒதுங்கி சிதறிக் கிடந்த மக்களை அப்பொருளாதாரத் தடைகளைத் தகர்த்தெறிந்து தேசம் தழுவிய, மத்தியத்துவப்படுத்திய ஒரே சந்தைப் பொருளாதாரத்தால் இணைத்து, ஒரு தேசத்தில் வாழ்வோர் அனைவரையும் ஒரே பொருளாதார வாழ்வைப் பகிர்ந்து கொள்ளச் செய்தது. இன்று சீனியின் விலையை ஐம்பது சதத்தால் இலங்கை அரசாங்கம் அதிகரித்தால் இலங்கையில் வாழும் சகலரும் அதனால் தாக்கத்துக்குள்ளாகின்றனர். அன்று இந்த

நிலைமை இருக்கவில்லை. மூன்றாவதாக, இவ்வாறு ஒரே தேசத்திற்குள் வாழும் முழு மக்களையும் ஒரே பொருளாதாரம் ஒன்றிணைந்து நெருக்கமாகப் பிணைத்ததன் விளைவாக அந்த தேசத்திற்குள் வாழும் ஒரே மொழியைப்பேசி ஒரே கலாச்சாரம் பேணும் மக்கள் கூட்டங்கள் தமக்குள் ஒரு பொது தொடர்பு கொண்டு "நாம் ஒரு தனியான மக்கட் கூட்டம்" எனக் கருதவும் உறவு கொள்ளவும் வழி அமைந்தது. நாலாவதாக, போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் நவீன வசதியுற்றதால் மேற்கூறிய பிணைப்பு மேலும் நெருக்கமடைந்தது. ஐந்தாவதாவது முதலாளித்துவம் இருவகைத் தேசங்களை உருவாக்கியது. ஒரு புறத்தில் ஒரே மொழியைப் பேசுகின்ற ஒரே கலாசாரத்தையுடைய ஒரே மக்கட் கூட்டங்களைக்கொண்ட "தேசிய அரசுகளை" (*National States*) உருவாக்கியது. உ-ம்: போர்த்துக்கல். மறுபுறத்தில் ஒரே தேசத்தின் மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தைப் பலமொழி, கலாச்சார மக்கள் பகிர்ந்து கொண்டு ஒரே அரசின் கீழ் வாழும் "பல தேசிய அரசு" களை (*Multi - National states*) உருவாக்கியது. இங்கெல்லாம் ஒரே தேசத்தில் பல தேசிய இனத்தவர் வாழ்கின்றனர். உ-ம்: இலங்கை, இந்தியா.

**இனி சுருக்குவோம் :**

I. முதலாளித்துவம் தோன்றுவதற்கு முன்னர் தேசியஇனம் என்ற வரலாற்று வகைப்பட்ட மக்கள் கூட்டம் வாழவில்லை.

II. முதலாளித்துவப் புரட்சி மத்தியகால பிளவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அரசின் எல்லைகளை திட்ட வட்டமாக வகுத்த பின்னரே தேசங்கள் உருவாகின.

III. அத்தேசங்களின் சகல பாகங்களையும், கிராமிய சுய தேவைப் பொருளாதார தனிமைகளைத் தகர்த்தெறிந்து, ஒரே மத்தியத்துவப்படுத்திய பொருளாதாரத்தால், ஒன்றிணைந்து, போக்குவரத்து செய்தித் தொடர்பு வசதிகள் பெருகிய பின்னரே தேசத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய இனங்கள் (*Nation*) தோன்றி மொழியாலும், கலாச்சாரத்தாலும் ஒன்றுபட்டு "நாம் இந்தத் தேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொதுவான வாழ்வை பகிர்ந்து கொள்ளும் மக்கள் கூட்டம்" என உணரவும் பாசம் கொள்ளவும் முடிந்தது.

IV. ஆகவே, ஆதி மனித இனத்தின் செல்வாக்கினுல் ஒன்றுபடாத மக்கட் கூட்டங்கள், மொழி கலாச்சார தன்மைகளால் ஒரணி திரளாத மனித குழுக்கள், ஒரு திட்ட வட்ட

மான, நிலையான, நிலப்பரப்பில், அதாவது தேசத்தில் வாழ்ந்து மொழியால், தாம் பேணும் கலாச்சாரத்தால் நெருக்கமாக இணையும் வரலாற்று வகைப்பட்ட தோற்றத்திற்குப் பெயர் தான் தேசிய இனம்.

ஒரு பிரசித்திபெற்ற மேதையின் மிகப் பொருத்தமான வரைவிலக்கணம் வருமாறு :

**" ஒரு பொது மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு, பொது கலாச்சாரமாக பிரதிபலிக்கும் மனோ பண்புகள் ஆகியவற்றின் அடிப் படையிலே வரலாற்று ரீதியில் உருவான நிலையான மக்கள் கூட்டமே தேசிய இனம்.**

*" A Nation is historically constituted stable community of people, formed on the busis of a common language, tenitory economic life and psychological make-up manifested in a common culture "*

இந்த நான்கு அம்சங்களில் ஏதாவதொன்று குறைந்தா லும் அது தேசிய இனமாக முடியாது.

# அத்தியாயம் இரண்டு

## மலையகத் தமிழர் இலங்கையின் தனியான தேசிய இனம்

மலையகத் தமிழரின் தேசிய உரிமை சம்பந்தப்பட்ட விட யத்தில் இருவிதமான சர்ச்சைகள் முன்வைக்கப் படுகின்றன. ஒன்று, அவர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். எனவே அவர்கள் இந்தியாவின் தமிழ் தேசிய இனத்தவர் இலங்கை யின் தேசிய இனமல்ல என்ற வாதம் இரண்டாவது, தமிழ் மொழியை பேசுவதால் இலங்கையிலுள்ள ஏனைய தமிழ் பேசும் சகலரும் மலையகத் தமிழரும் ஒரே தேசிய இனம் என்ற வாதம்;

இவ்விரு வாதங்களுக்கும் இங்கு விடை காண்போம்.

**I. மலையகத்தமிழர் இந்தியரே இலங்கையின் தேசிய இனமல்ல என்ற வாதம்......**

உலகில் பல்வேறு வகையான குடிப்பெயர்ச்சிகள் *Migrations* நடந்தேறியுள்ளன. :அவற்றுள் இரண்டு பிரதான வகைகளை இங்கு ஆராய்வோம்;

I. பலாத்காரத்தோடு கூடிய குடியேற்றங்கள்.

ஒரு மக்கட் கூட்டம் மற்றொரு பிரதேசத்தை ஆக்கிரமித்து அப்பிரதேச மக்களை ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கி விட்டு அல்லது முற்றாக அழித்தொழித்து விட்டு அப்பிரதேசத்தை பலவந்தமாக சொந்தங் கொண்டாடியுள்ள நிகழ்ச்சிகள் உலக வரலாற்றில் தாராளமாக இடம்பெற்றுள்ளன.

அவுஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளான அபரோஜின் மக்களை கொன்றுக் குவித்து, உயிரோடு எஞ்சியவர்களை ஒரு சிறு பிரதேசத்தில் வைத்திருக்கும் வெள்ளை நாகரீகத்துக்குப் பெயர்தான் அவுஸ்திரேலியா.

டாஸ்மேனியர் என்ற மக்கள் கூட்டத்தை ஒருவர் தானும் உயிருடன் இல்லாமல் முற்று முழுதாக துவம்சம் செய்து விட்டு அவர்களது பிணக்குவியல் மீது எழுப்பப் பட்டதுதான் டாஸ்மேனியா. ஆங்கிலப் படையின் துப்பாக்கி வெறித்தனத்திற்கு அஞ்சி மற்றொரு தீவுக்கு தப்பி ஓடிய டாஸ்மேனியச் சிறு குழு அத்தீவில் சிறிதுகாலம் வாழ்ந்தது. அங்கு கடைசி டாஸ்மேனியன் 1893இல் இறந்து போனான்:

இன்கா, மாயா நாகரீகத்தை அழித்தொழித்து செவ்விந்தியர்களின் செங்குருதியால் எழுதப்பட்டதுதான் அமெரிக்க நாகரிகம்.

இங்கெல்லாம் உண்மையான நாட்டின் சொந்தக்காரர்கள் ஒன்றில் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். அல்லது முற்றாக அழித்தொழிக்கப்பட்டுள்ளனர். அத்துமீறி குடியேறியவர்கள் அந்நாட்டின் சொந்தக்காரர் ஆகிவிட்டனர். துப்பாக்கி முனையில் தேசிய உரிமையை அவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டார்கள். இன்று அமெரிக்கரைப் பார்த்து "அமெரிக்கா செவ்விந்தியருக்குச் சொந்தமானது. நீங்கள் உங்கள் தாய் நாடான பிரித்தானியாவுக்குத் திரும்பிச் செல்லுங்கள்" என யாராவது கூறினால் அது பையித்தியக் காரனின் பிதற்றலாகவே இருக்கும். ஒரு வரலாறு தெரிந்த ஜனநாயக வாதிகூட "அமெரிக்கர்களே! வரலாற்று ரீதியாக உங்கள் தேசிய உரிமையை எவராலும் மறுக்கமுடியாது. உங்கள் தேசிய உரிமையை நாம் மதிக்கிறோம். ஆனால் துப்பாக்கியால் நீங்களாகவே எடுத்துக்கொண்ட அதே தேசிய உரிமையை நீக்கிரோக்களுக்கும் செவ்விந்தியருக்கும் நீங்கள் வழங்கவேண்டும்! என்றுதான் கூறமுடியும்.

**2. பலாத்காரத்தை பிரயோகிக்காத குடியேற்றங்கள்........**

இந்த வகையில் பலவேறுவிதமான குடிப்பெயர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் தலைப்புடன் சம்பந்தப்பட்ட காலனியில் தோற்றத்தோடு ஒட்டி பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை உருவானபோது "கூலி" வேலைக்காக இடம் பெயர்ந்த குடியேற்றங்களை மாத்திரம் இங்கு ஆராய்வோம்.

சீனா, இந்தியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் அப்போது நிலவிய வறுமை நிலையை சாதகமாகக் கொண்டு, தமது ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய நாடுகள் பல்வேறு நாடுகளுக்கு "மலிவான கூலிகளை" தமது பெருந்தோட்டங்களுக்கு குடிப் பெயரச் செய்துள்ளன.

இந்தியாவிலிருந்து இலங்கை, பர்மா, தென் ஆபிரிக்கா மேற்கிந்திய தீவுகள், பீஜித்தீவு ஆகியவற்றிற்கு தமிழ்பேசும் மக்களும், சீனாவிலிருந்து மலேசியா, மேற்கிந்திய தீவுகள், பீஜித்தீவு போன்ற நாடுகளுக்கு சீனரும், ஆபிரிக்காவில் இருந்து மிலேச்சத்தனமான அடிமை வியாபாரத்தின் மூலம் அமெரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிற்கு பிடித்துச் செல்லப்பட்ட நீக்கிரோ மக்களும் இப்பிரிவில் அடங்குவர்.

இவ்வாறு மலேசிய ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் சீனர்கள் அந்நாட்டின் பிரஜைகளாகி விட்டனர். அமெரிக்காவில் வாழும் நீக்கிரோக்கள் கூட அந்நாட்டு பிரஜைகளாக்கப்பட்டு விட்டனர். ஆனால் இலங்கையில் மலையகத் தமிழர்களில் ஒரு சாரார் இன்னமும் நாடற்றவர்களாகக் கருதப் படுகின்றனர். தென் ஆபிரிக்க இனவெறியர்கள் அன்று இந்தியக் குடிகளை விரட்டி அடித்தார்கள். அதே போன்ற இனவெறித் தனத்துடன் இலங்கையில் மலையகத் தமிழர்கள் நடத்தப்படுகிறார்கள்.

ஒட்டு மொத்தமாக ஆராயுமிடத்து இவ்வாறு பிறந்தகத்தை விட்டு மற்றொரு நாட்டுக்கு வஞ்சகமாகவோ, பலாத்காரமாகவோ " மலிவான உழைப்புப் பட்டாளமாக " குடி பெயர்க்கப்பட்டோர் அவர்கள் குடியேறிய நாடுகளை தமது கடின உழைப்பால் வாழவைக்கிறார்கள். அவர்களால் அந்த நாடுகளுக்கு எதுவித தீங்கும் ஏற்பட்டதில்லை. ஆனால் அவர்கள் மோசமாகச் சுரண்டப்படும் அதே சமயம் இரண்டாந்தர, மூன்றாந்தரப் பிரஜைகளாகவும் நடத்தப்படுகிறார்கள். இங்கெல்லாம் வர்க்கச் சுரண்டல் தேசிய இன அடக்குமுறையிலிருந்து பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளதைக் காணலாம்.

இனி முடிவுக்கு வருவோம். ஆயுத பலத்தால் நாடுகளை அபகரித்தவர் ஆள்வோராகிவிட்டனர். தமது கடின உழைப்பால் குடியேறிய நாடுகளை வாழவைக்கும் தொழிலாளர் அகதிகளாக விரட்டி அடிக்கப்படுகின்றனர். இந்த மிலேச்சத்தனமான தீர்ப்பை வரலாறு ஒருகாலும் மன்னிக்காது. எமது அரசாங்கங்களும், இன வெறியர்களும் இதையே தமது தேசிய தர்மமாகக் கருதப்போகின்றனரா?

பாகிஸ்தானிலிருந்து இங்குவந்து ஜபர்ஜீக்கள் இலங்கையைக் கொள்ளை அடிப்பதற்கு கௌரவம் வாய்ந்த பிரஜா உரிமை கொடுத்து தேசிய அந்தஸ்து வழங்கியிருக்கும்போது இலங்கையின் தேசிய வருவாயில் 85% வீதத்தை ஈட்டித்தரும் மலையகத் தமிழரை நாடற்றவராக, வாக்குரிமையற்றவராக, தேசிய உரிமையற்றவராக வைத்து விரும்பிய போதெல்லாம் இனவெறியைத் தூண்டி கொள்ளை அடிக்கவும், கொலை செய்யவும், கற்பழிக்கவும், உடமைகளைத் தீ வைத்துக் கொழுத்தி உயிரோடு அவர்களை அதில் தூக்கி எறிந்து சாம்பலாக்கவும் நினைப்பது பௌத்த தர்மத்தின் சமத்துவக் கொள்கையா?

இந்தியாவிலிருந்து இங்கு வந்தால் மலையகத் தமிழர் அந்நியர் என்றால் சிங்கள மக்களும், ஏனைய தமிழ்மக்களும், முஸ்லீம்களும்கூட அந்நியர்கள்தான். இந்தியாவிலிருந்து வந்தவர்கள்தான். இலங்கையில் நிலவும் பௌத்த, இந்து, இஸ்லாம் மதங்கள் கூட அந்நிய சரக்குகள் தாம்.

இதே வாதத்தை இப்படியே வளர்த்துக்கொண்டு போனால், இந்தியாவிலிருந்து இலங்கை வந்த காரணத்தால் மலையக தமிழர் இந்தியா செல்லவேண்டுமானால் அமெரிக்க கண்டத்திலிருந்தும், அவுஸ்திரேலியாவிலிருந்தும் ஐரோப்பியர்கள் வெளியேறி தமது பூர்வீக பிறப்பிடங்களுக்குத் திரும்ப வேண்டும். ஏனைய இலங்கை தமிழரும், இஸ்லாமியரும், இந்தியாவுக்கும் அரேபியாவுக்கும் செல்லவேண்டும். சிங்கள மக்கள் எங்கே செல்வது என்று இனிமேல்தான் ஆராய வேண்டும். அப்படியானால் இலங்கையில் வேடரும், வனவிலங்குகளும் மாத்திரமே வாழ முடியும். முழு உலகிலும் ஐந்தில் நாலு பகுதி இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டுவிடும்! சம்மதமா?

உளத்தூய்மையோடு கூறுவதானால் மலையகத் தமிழர் அடர்த்தியாக இன்று வாழும் மத்திய மலைநாடு மலையகத் தமிழர்களால் உருவாக்கப்பட்டது. "கண்டிய விவசாயிகளை

விரட்டி அடித்த '' வரலாற்றுப்புரளி மலையகத் தமிழருக்கெதிரான மனோபாவத்தை சிங்கள மக்கள் மத்தியில் வளர்ப்பதற்காக வேண்டுமென்றே இன்று மிகைப்படுத்தப்படுகிறது.

உண்மை என்ன? ஒன்று, அன்று நிலவியது மத்தியகால கிராமிய சுயதேவைப் பொருளாதாரம். நெல் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டே அன்றைய கிராமங்கள் உருவாகியிருந்தன. எனவே பின்வரும் சாதாரண உண்மைகளை எவரும் மறுக்க முடியாது.

(அ) கடல் மட்டத்திற்கு 3000 அடிக்கு மேற்பட்ட இடங்களில் குளிர் காரணமாக நெல் வளராது. எனவே, நெல்லை அடிப்படையாகக் கொண்ட கிராமங்களோ, குடியிருப்புக்களோ அன்று க: ம. 3000 அடிக்கு மேற்பட்ட மலைப்பகுதியில் அமைந்திருக்கவில்லை. அமைந்திருக்கவும் முடியாது:

(ஆ) அன்று இப்பகுதிகளில் அடர்ந்த காடுகளே காணப்பட்டன. வனவிலங்குகள் வாழும் பயங்கர காடுகளை அழித்து தனது ரத்தத்தாலும், வியர்வையாலும் நாடு சமைத்தவன் மலையகத் தமிழ் தொழிலாளி; முதன்முதலாக இப்பகுதிகளில் காலடி எடுத்து வைத்தவனும், குடியேறியவனும் அவனே. இப்பிரதேசத்தை உருவாக்கியவன் மலையகத் தமிழ்தொழிலாளி. எனவே மலையகம் அவனுக்கே உரிய சொந்த பூமி. உண்மையில் வர்த்தக தேவைக்காகவும், பிற தொழில்களுக்காகவும் இங்கு வந்த ஏனைய சமூகத்தைச் சேர்ந்த சகலரும் இம் மண்ணுக்கு அந்நியர்கள். இவர்களை அண்டிப்பிழைக்க வந்தவர்கள்.

(இ) இப்பகுதிகளில் இருநூறு வருடங்களுக்கு முந்திய ஒரு கட்டிடத்தைத்தானும் காணமுடியாது.

(ஈ) அப்படியானல் கண்டி விவசாயிகள் '' நிலச் சட்டத்தின் '' மூலம் விரட்டி அடிக்கப்பட்ட வரலாற்று உண்மையை நாம் மறுக்கிறோமா? இல்லை. 3000 அடிக்குக் குறைவான இடங்களில் வாழ்ந்த கணிசமான சிங்கள குடிமக்களின் நிலம் இவ்வாறு பறிக்கப்பட்டது உண்மைதான். ஆனல் அந்த மிலேச்சத்தனத்தைச் செய்தவர் யார்? பிரித்தானியர்.

அந்த செயலுக்காக பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளை (அப்பாவி பிரித்தானிய மக்களை அல்ல) பழிவாங்க நினைத்தால் அது நியாயம். ஆனல் அப்பாவி மலையகத் தமிழரை தண்டிக்க நினைப்பது என்ன நியாயம்? எய்தவன் இருக்க அம்பையா நோவது?

கண்டிய விவசாயிகள் விரட்டப்பட்ட புரளி சம்பந்தமாக சில விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும்.

I. இதை ஏன் 'புரளி' என்கிறோம். ஏனெனில் அன்று கண்டி விவசாயிகளை விரட்டி அடிப்பதற்கு பிரித்தானியனுக்கு துணைநின்ற அரசியல் வாதிகளே, பிற்காலத்தில் அரசில், வர்க்க காரணங்களுக்காக திடீரென கண்டிய விவசாயிகளின் கதியை நினைத்து பல பத்தாண்டுகள் கழித்து ஒப்பாரி வைக்கத்தொடங்கினர். இப்புரளியைக் கிளப்பி மலையகத் தமிழருக்கெதிராக சிங்கள மக்களை தீண்டிவிட்டனர். இதோ சில கசப்பான உண்மைகள்.

(அ) இந்திய அரசாங்கம் வெளியேற்றத் தடைசட்டம்—14ம் விதிப்படி இந்தியர் இலங்கைக்கு கூலிகளாக வருவதை தடைசெய்தது. இத்தடையை அகற்றும்படி கோருவதற்காக ஒரு தூதுக்குழு இந்தியா சென்றது. அந்த தூதுக்குழுவில் D. S. சேனநாயக்காவும் இருந்தார்.

(ஆ) இதன் பயனுகவே மீண்டும் இந்தியாவிலிருந்து தமிழர்கள் இலங்கை பெருந்தோட்டத்திற்கு வர அனுமதிக்கப்பட்டார்கள் அத்தடைச்சட்டம் நீக்கப்பட்டது. அப்போது இலங்கையிலிருந்த இந்திய தொழிலாளர்களில் தொகை சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் மாத்திரமே.

(இ) 1697ல் இன்று சர்ச்சை கிளப்பப்படுகிற "முடிக்குரிய காணிச்சட்டம்", "பயனற்ற காணிச்சட்டம்" ஆசியபிரித்தானியரால் நிறைவேற்றப்பட்டன. கண்டி விவசாயிகளை சொல்லொண்ணு துயரத்துக்காளாக்கிய இச்சட்டங்களை எதிர்த்து இந்த தலைவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

II. இந்த நிலச்சட்டங்கள் அமுலாவதற்கு முன்னமுமே சுமார் $3\frac{1}{2}$ லட்சம் நிலப்பரப்பில் கோப்பியும், தேயிலையும் (குறைந்தளவில்) பயிர் செய்யப்பட்டிருந்தது.

III. எனவே, (அ) இன்று பெருந்தோட்டங்களாக இருக்கும் சகல நிலப்பரப்பும் சிங்கள மக்கள் குடியிருந்த நிலங்கள் என்று கூறுவது முழுப்பொய்யாகும். (ஆ) பிரித்தானியரின் கொடுமையினுல் கண்டிச் சிங்கள விவசாயிகள் வெளியேற்றப்பட்டார்கள் என்பதற்காக, மலையகத்தமிழரை விரட்டி விட்டுச் சிங்கள மக்களுக்குக் காணி வழங்க நினைப்பது "எசமான் அறைந்ததற்காக மனைவியை அடித்து உதைப்பதைப்" போன்ற செயலாகும்.

(இ) இன்று "அபரோஜின் மக்களுக்கு நிலத்தை ஒப்படைத்து விட்டு ஐரோப்பா சென்றுவிடு" என அவுஸ்திரேலியனுக்கு எவ்வாறு கூறமுடியாதோ, "வேடனுக்கு நாட்டை வழங்கி விட்டு வங்கத்திற்குப் போய்விடு" என்று எதற்காகச் சிங்கள மக்களுக்குக் கூறமுடியாதோ அதே வரலாற்றுக் காரணங்களுக் காக எந்தப் புரளியாலும் மலையகத்தமிழரை அவர்கள் வாழும் அவர்களது மலையை விட்டு விரட்ட எவருக்கும் உரிமை கிடை யாது.

பிரித்தானியாவிலிருந்து குடிபெயர்ந்து எவ்வாறு ஆங்கிலேயர் அமெரிக்காவில் குடியமர்ந்து காலப்போக்கில் தனியான தேசிய இனமாகி விட்டார்களோ, எப்படிச் சீனவிலிருந்து குடிபெ யர்ந்து மலேசியாவில் குடியமர்ந்த சீனர் மலேசிய தேசிய இனங்களில் ஒன்ருக ஆகிவிட்டார்களோ அதேபோல முதலாளித் துவ பொருளாதாரம் இலங்கையில் உருவாகும்போது இங்கு குடி யமர்ந்த மலையகத் தமிழர் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்ருக உருவாகி வளர்ந்து விட்டனர். அவர்கள் சர்வ சமத் துடன் கூடிய தேசிய உரிமையை இலங்கையில் அனுபவிக்க உரித்துடையவர். அதனை அவர்களுக்கு வழங்கியே தீரவேண்டும்.

## II. மலையகத் தமிழர் தமிழ்மொழியைப் பேசுவதால் தனியான தேசிய இனமல்ல என்ற வாதம்———

பல மொழிகளைப் பேசும் கலாச்சாரத்தால் ஒன்றுபட்ட மக்களை ஒரே தேசிய இனமாகக் கருதமுடியாது. உதாரணத் திற்கு உலகெங்கும் பரந்து வாழ்கின்ற இஸ்லாமியரைக் கூற லாம். வெவ்வேறு அரசின் எல்லைகள், மொழி வேறுபாடுகள் மாறுபட்ட பொருளாதார பிணைப்புகள் ஆகியவற்ருல் இக் கலாசாரக் குழுக்கள் வேறுபடுகின்றன. வித்தியாசமான பிர தேச சூழல்கள் மத அடிப்படையில் உருவான கலாச்சாரத்திலும் கூட மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

அதேபோல ஒரு மொழியைப் பேசுகின்ற பல்வேறு தேசிய இனங்களை மேற்கூறிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகள் தோற்றுவித்துள்ளன. டேனிஷ்காரரும், நோர்வீஜி யர்களும் ஒரே மொழியைப் பேசியபோதும் வெவ்வேறு தேசிய இனங்கள். இங்கிலாந்துக்காரரும், அமெரிக்கரும், ஐரிஷ்கார ரும் ஆங்கில மொழியைப் பேசும் வெவ்வேறு தேசிய இனக்கள். அராபு மொழியைப் பேசும் பல தேசிய இனங்கள் உலகில் உள்ளன. அதேபோல மலாய் மொழியை, சீன மொழியைப் பேசுகின்ற பல்வேறு தேசியங்கள் வாழ்கின்றன.

எனவே மொழியை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மக்கட் கூட்டங்களை ஒரே தேசிய இனமாக வரையறுப்பது தவருகும். மலையக மக்களை ஏனைய தமிழ் பேசும் மக்களிலிருந்து வேறுபடுத்தும் அவர்களது கலாச்சார மனேபாவத்தை உருவாக்குவதில் பின்வரும் பத்து காரணிகள் ஏதுவாயமைந்துள்ளன.

I. பூர்வீகத் தாயகத்துடனுன தொடர்பு (*Contact with the birth centre*)

(அ) மலையகத் தமிழர் இந்தியாவைப் பிரிந்து வெகுகாலம் ஆகவில்லை. (ஆ) அவர்களது பூர்வீகத் தாயகமான இந்தியா இலங்கைக்கு மிக அண்மையில் இருக்கிறது. (இ) இந்தியாவில் தமிழ்நாடு ஒரு தனி மாநில அரசாக இருப்பது இவர்களுக்கு அதன்பால் உள்ள பற்றுதலை அதிகரிக்கிறது. (ஈ) ஆரம்பத்தில் இவர்கள் இலங்கையின் நிரந்தரக் குடிகளாக அமைவு பெறவில்லை. கோப்பிப்பயிர் பருவகால அடிப்படையைக் கொண்டிருந்தமையால் அதற்கு நிரந்தரமான தொழிலாளர் தேவைப்படவில்லை. அத்துடன் இங்குவந்த தொழிலாளர் அறுவடைக்காலங்களிலும், விதைப்புக் காலங்களிலும் இந்தியா திரும்பிச் செல்லவேண்டி இருந்தது. தேயிலை உற்பத்தி தொடங்கிய பின்னர் நிலைமை மாற்றமடைந்தாலும் 1957ல் திருச்சிராப்பள்ளியில் இருந்த இலங்கையின் குடியகல்வு காரியாலயம் மூடப்படும்வரை இந்தியாவுக்குப்போய் திரும்பிக்கொண்டிருந்தனர். (உ) தற்போது இந்தியாவுடனுன போக்குவரத்து நின்றுவிட்டாலும்கூட அங்குள்ள உறவினர்களுடனுன கடிததொடர்புகள், இந்திய சினிமாக்கள், இந்திய சஞ்சிகைகள் முதலியவற்றுல் இந்திய தொடர்பை நினைவு கூர்கின்றனர்.

இந்த காரணங்களால் மலையகத் தமிழர் இன்னும் இந்திய மண்மீதான பற்றுதலை விட்டுவிடவில்லை. இன்னும் "நாம் இலங்கையர்" என்ற உணர்வு இவர்களுக்கு ஏற்படாததற்கு இவையே காரணம். இந்த போக்கை அடிக்கடி இந்தியா போய் வரும் வர்த்தகர்களும், இவர்களது தலைவர்களும் வலுப்படுத்தி வருகிருர்கள்.

ஏனைய தமிழ் பேசும் மக்களிடம் இந்த மனேபாவம் கிடையாது. அவர்களுக்கு பூர்வீக தாயகத்துடனுன இரத்த உறவு இல்லாமற்போய் வெகுகாலமாகிவிட்டது. வடக்கு, கிழக்கு மக்கள் ஒரு காலத்தில் தமிழ் அரசுகளைக் கொண்டிருந்தனர்.

எனவே அவர்களிடத்து இந்திய மோகம் கிடையாது. நாம் இலங்கையில் வாழும் தனியான மக்கள் கூட்டம் என்ற உணர்வே காணப்படுகிறது.

II. அளவியல் காரணி — *Quantitive factor*

ஒரு மக்கள் கூட்டம் பெரிய அளவில் இடம்பெயர்ந்தால் பிற மக்கள் கூட்டங்களுடன் எளிதில் இரண்டறக் கலப்பதில்லை.

சாமோதீவிலும், பிஜித்தீவிலும் சிறிய அளவில் குடியேறியுள்ள சீனர்கள் அங்குள்ள பிறதேசிய இனத்தவருடன் இரண்டறக் கலந்துவிடுகின்றனர். ஆனால் ஹவாய்தீவிலும், மலேசியாவிலும் கணிசமான தொகையில் குடியேறியுள்ள சீனர் அங்கெல்லாம் பிறதேசிய இனங்களுடன் இரண்டறக் கலவாமல் தனி தேசிய இனமாக வாழ்ந்து தமது தனித்துவத்தை பாதுகாத்துவருகின்றனர்.

அதுபோலவே இலங்கையில் குடியேறியுள்ள மலையகத் தமிழரும் கணிசமான தொகையினராக உள்ளதால் பிறருடன் இங்குள்ள ஏனைய தேசிய இனங்களுடன் கலவாமல் ஒரு தனி மக்கள் கூட்டமாக வாழ்ந்து வருகின்றனர்.

III. பிரதேச பரம்பல் — *Territorial distribution*

ஒரே இடத்தில் அடர்த்தியாகக் குடியேறி வாழும் மக்கள் விட ஆங்காங்கு பரவலாக சிதறிவாழும் மக்கள் தமது தனித்துவத்தை விட்டுக்கொடுத்து பிறமக்களுடன் இரண்டறக் கலப்பர்.

இதற்கு பிஜித்தீவு நல்லதோர் உதாரணம்; பீஜித்தீவிலே பரந்து சிதறி வாழுகின்ற சொலமன் தீவினர். கெலிடோனியர், சாமோ மக்கள், டொங்காவாசிகள் ஆகியோரின் வம்சாவழியினர் பிறமக்களுடன் இரண்டறக் கலந்துவிடுகின்றனர். ஆனால் அதே தீவில் ஒரே இடத்தில் அடர்த்தியாக வாழும் மியூரோனேசியர், பளுபன் மக்கள் ஆகியோர் அவ்வாறு கலவாமல் தனி ஒரு மக்கள் கூட்டமாக வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் வாழும் மலாயர் தமது கலாச்சாரத்தில் நெருக்கமான இஸ்லாமியருடன் கலப்பதையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

மலையகத் தமிழர் ஏனைய தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களுடன் தொடர்பற்ற ஒரு பிரதேசத்தில் அடர்த்தியாக குடியிருப்பதால் அவர்களுடன் சம்பந்தமே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

IV. சமூக வாழ்வு — *Comunity Life*

மலையகத் தமிழர் மலேசிய சீனரைப்போல, அவர்களை விடவும் கூடிய ஒரு கூட்டுத்துவ வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். ஒரு கூரைக்குக் கல் விழுந்தால் பதினாறு குடும்பங்கள் ஒரே சமயத்தில் விழித்து எழுந்து குரல் எழுப்பும். அந்த முழு தோட்டமும் பரபரப்படையும். இப்படியான ஒருவர் நலத்துடன் ஏனையோரின் நலன்கள் பிணைக்கப்பட்ட கூட்டு சமூகவாழ்வை உடைய வேறு எந்த ஒரு சமூகத்தையும் இலங்கையில் காணமுடியாது. இந்த சமூக வாழ்க்கையும் இவர்களை மாத்திரமே தங்கி வளர்ந்துள்ள தொழிற்சங்கங்களும் இவர்களிடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தியுள்ளன. இவர்களுடைய அரசியல், சமூக பிரச்சினைகளும் ஏனைய மக்களில் இருந்து வேறுபட்டவை. இவை அனைத்தும் சேர்ந்து இவர்களை ஏனைய மக்களில் இருந்து வேறுபட்ட தனியான சமூக வாழ்க்கை முறையை ஏற்படுத்துகின்றன.

V. காலக் காரணி — *Time Factor*

ஒரு மையத்திலிருந்து இடம் பெயர்ந்தாலும் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு காரணங்களுக்காக குடியேறிய மக்கள் விரைவில் ஒன்றுகலப்பதில்லை.

உ+ம் பீஜித்தீவு. பீஜித்திவிலே பெருந்தோட்டங்களில் குடியமர்ந்த ஒசனிய வாசிகளான தொழிலாளர்களுடன் அண்மைக் காலத்தில் கல்வி, உத்தியோகத் தேவைக்காக குடியேறிய அதே ஒசனிய வாசிகள் இரண்டறக்கலக்கவில்லை.

இரு வேறுபட்ட காலக் கூட்டங்களில் வெவ்வேறு தேவைகளுக்காக இலங்கையிலே குடியேறிய இலங்கைத் தமிழரும், மலையகத் தமிழரும் இரு வேறு தேசிய இனங்களாக, தம் தமது தனித்துவங்களை இழக்காத தனித்தனி மக்கள் கூட்டங்களாய் வாழ்ந்து வருகின்றனரே தவிர இரண்டறக் கலக்கவில்லை.

VI. பொருளாதார பிணைப்பு — *Economic Links*

இரு வேறு மக்கள் கூட்டங்களும் ஒரே விதமான தொழிலில், பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டால் பொது

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE
LIBRARY
270

வான பிரச்சினைகள், பொது நலன்களின் நிர்ப்பந்தம் ஆகிய வற்றின் உந்துதலால் இரண்டறக் கலத்தல் தூண்டப்படும். ஆனால் மலையகத் தமிழருக்கும் ஏனைய தமிழருக்குமிடையே எதுவித பொருளாதார பிணைப்பும் கிடையாது. மலையகத் தமிழரின் தொழில் ஏனைய மக்களின் தொழிலுடன் தொடர்பே இல்லாதது. முற்றிலும் வேறுபட்டது.

இந்த பொருளாதார காரணிதான் ஏனைய சகல காரணி களையும்விட மலையகத் தமிழரின் தனித்துவத்தை அழுத்தம் பெறச் செய்வதிலும், பிறமக்களுடன் கலக்கவிடாமல் தடுப்ப திலும் பிரதான பாத்திரம் வகிக்கிறது.

VII. சமூக, சட்ட அந்தஸ்து — *Social & Legal Status*

எந்த நாட்டில் தேசிய இனங்களுக்கிடையே சமத்துவம் நிலவுகிறதோ அங்கெல்லாம் தேசிய தப்பெண்ணங்களும் தேசிய தனித்துவத்தின் அழுத்தங்களும் வலு பெறுவதில்லை. இதற்கு நல்ல உதாரணமாக யூகோஸ்லாவியாவும் சுவிர்சர் லாந்தும் சீனாவும் விளங்குகின்றன.

சுவிட்சர்லாந்தின் சனத்தொகை வருமாறு: ஜெர்மன் மொழியைப் பேசுவோர்—70%: பிரெஞ்சு மொழியைப் பேசு வோர்—22%. இத்தாலி மொழியைப் பேசுவோர்—7%. ஆனால் இம் மூன்று மொழிகளும் உத்தியோக மொழிகளாக அரசாங் கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே இங்கு தேசிய சமத்துவம் நிலவுகிறது. இத்தாலி மக்கள் சுயவிருப்பத்தோடு பிரெஞ்சு மொழியையும் சேர்த்து கற்கிறார்கள். ஒரு மொழிக்கு எதிர்ப்பு அதை பலவந்தமாக திணிக்கும்போதுதான் ஏற்படும். சுவிட்சலாந்தில் அப்படி அல்ல.

இதற்கு நேரெதிரான உதாரணமாக நோருதீவு (*Nauru*) திகழ்கிறது. இங்கு நோரு மக்கள் மாத்திரமே சட்ட உரிமை களை அனுபவிக்கிறார்கள். இதனால் இவர்களோடு கலாச்சாரத் தால் நெருங்கிய தொடர்புடைய கில்பர்ட், எலிஸ்தீவு குடி வாசிகள் நோரு மக்களை அவநம்பிக்கையோடும், வெறுப்போ டும் நோக்குகின்றனர். இரண்டறக் கலத்தல் இவர்கள் மத்தி யில் நடைபெறுவதில்லை.

இலங்கையில் சட்டரீதியான விஷேட உரிமைகளை சிங்கள மக்கள் அனுபவிக்கும் அதே சமயம் தேசிய அடக்குமுறைக்கு முகங்கொடுக்கும் ஏனைய தமிழரும் மலையகத் தமிழரை தமக்

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA



குச் சமமாக வைத்து மதிக்கவில்லை. அவர்கள் ஒன்றில் மலையகத் தமிழரை இகழ்ச்சியாக நோக்குகின்றனர். அல்லது பரிதாப கண்கொண்டு நோக்குகின்றனர். எனவே அவர்கள் தம்மை சமுதாய, சட்ட அந்தஸ்தில் குறைந்தவராகக் கருதும் ஏனைய தமிழரை அவநம்பிக்கையுடனும், வெறுப்புடனும் நோக்குகின்றனர்.

இலங்கையின் சட்டங்கள் மலையகத் தமிழருக்கு பிரத்தியேகமான பாரபட்சம் காட்டுகின்றன. இவை யாவும் சேர்ந்து நாம் வேறுவிதமான வரலாற்றை உடைய, வேறுபட்ட பிரச்சினைகளைக் கொண்ட தனியான மக்கள் கூட்டம் என்ற உணர்வை வலுப்படுத்துகின்றன.

### VIII. கலப்புத் திருமணங்களும் உறவுகளும் — *Mioced Marriages & Relationship*

மலையகத் தமிழருக்கும் ஏனைய தமிழருக்குமிடையே திருமண சம்பந்தங்கள் நடைபெறுவதில்லை. அவ்வாறு விதிவிலக்காக ஒன்றிரண்டு நடைபெற்றாலும் அவை வழக்கத்திற்கு மாறான கலப்புத் திருமணங்களாகவே கருதப்படுகின்றன. இதனால் இரண்டறக் கலக்கும் போக்கு தடைப்படுகிறது.

மலையகத் தமிழர் இந்தியாவிலிருந்து குடிபெயரும்போது ஏற்பட்ட ஒரு சிறப்பம்சத்தை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். (அ) இந்தியாவின் சில குறிப்பிட்ட மாவட்டங்களில் இருந்தே இவர்கள் குடிபெயர்ந்தார்கள். (ஆ) அவ்வாறு குடிபெயரும் போது அந்தந்த கிராமங்களை அப்படியே அள்ளி எடுத்து அச்சு குலையாமல் மலையகத்தில் ஒட்ட வைத்தாற் போலவே இவர்கள் குடியமர்த்தப்பட்டார்கள்.

இதனால் இவர்களது உறவினர்களுடனை சம்பந்தங்கள் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. இந்தியாவில் தாம் வாழ்ந்த உறவினர்கள் மத்தியிலேயே இலங்கையிலும் இவர்களால், இதனால் வாழமுடிந்தது. இது சொந்த பந்த உறவுகளைத் தமக்குள்ளே வைத்துக்கொள்ள வழிவகுத்ததுடன் தமிழ் தேசிய இனத்துடன் உறவு கொள்ளும் அவசியத்தை இல்லாமலும் செய்துவிட்டது.

### IX. கலாச்சார தரம் — *Cultural Level*

கலாச்சாரத் தரத்தில் வேறுபட்ட மக்களிடையே சமத்துவ உணர்வு ஏற்படுவதுமில்லை. இரண்டறக்கலத்தல் நடைபெறுவதுமில்லை.

இதற்கு நல்ல உதாரணமாக சொலமன்தீவு விளங்குகிறது. சொலமன் தீவில் இருந்து பீஜித்தீவிற்கு குடியேறும் சொலமன் வாசி நீண்ட காலம் பீஜித்தீவில் வாழ்ந்து தமது கலாச்சாரத்தரத்தை உயர்த்திக்கொண்டால் பீஜிவாசிகளுடன் இரண்டறக் கலக்கமுடியும். ஆனால் சொலமன் தீவிற்குச் சென்று குடியேறும் கலாச்சாரத்தில் மேம்பட்ட பீஜிவாசி சொலமன் வாசிகளுடன் இரண்டறக் கலப்பதில்லை.

அதுபோலவே கலாச்சாரத்தில் மேம்பட்ட இலங்கைத் தமிழர் மலையகத் தமிழருடன் இரண்டறக் கலப்பதில்லை. தம்மை சமதையாக மதிக்காத அவருடன் கலக்க மலையகத் தமிழரும் விரும்பவில்லை.

X. கலாச்சார, அரசியல் தொடர்புகள் — *Cultural & Political links*

மலையகத் தமிழரும் ஏனைய தமிழரும் ஒரே மொழியையும் ஒரே மதத்தையும் போற்றிய போதும் இவை இவர்களை இணைக்கவில்லை.

மலையகத் தமிழர் பேசும் தமிழ் ஏனைய தமிழர் பேசும் தமிழில் வேறுபட்டதாகத் திகழ்கிறது. மலையகத் தமிழரின் கலை இலக்கியங்கள் இந்திய செல்வாக்குட்பட்ட மலையகமயப்பட்டதாகவும் ஏனையோரது கலை இலக்கிய நடவடிக்கைகள் தனித்துவம் பொருந்தியதாகவும் தென் இந்தியாவுடன் போட்டி போடும் அளவுக்கு, சில அம்சங்களில் தென் இந்தியாவை விஞ்சியதாகவும் இருக்கிறது. இவ் இரு வேறு மக்களின் மொழி, கலை, இலக்கிய வளர்ச்சிகள் இரு வேறுபட்ட திசைகளில் செல்கின்றன.

இரு சாராரும் இந்து மதத்தை வழிபட்டபோதும் அதிலும் இரு போக்குகள் தெளிவாகத் தெரிகின்றன. இலங்கைத் தமிழரின் சமய ஆசார மையங்களாக நல்லூர் கந்தன், கேர்ணேஸ்வரம், கீரிமலை, முனீஸ்வரம் ஆதியன திகழ்கின்றன. மலையகத் தமிழரோ மாத்தளை முத்துமாரி அம்மன் கோயிலை தமது பிரதான கோயிலாக வளர்ப்பதுடன் கதிர்காமத்தை பிரதான வழிபாட்டுத்தளமாகக் கொள்கின்றனர். யாழ் மக்கள் நல்லூர் கந்தனுக்கு நேர்த்திக்கடன் வைக்கும்போது இவர்கள் பழனி ஆண்டவனையும், கதிர்காமக் கந்தனையும், மதுரை மீனாட்சி அம்மாளையும் நினைக்கிறார்கள். மலையகத் தமிழரின் சமய வழிபாடு, திருவிழாக்கள், பண்டிகைகள் ஆகியவற்றில் இந்திய செல்வாக்கு பெரிதும் காணப்படுகிறது

ஆனல் ஏனைய தமிழ் தேசிய இனம் மத அனுட்டானத்திலும் தனித்துவத்தைப் பேணுகிறது. இவர்கள் ஆறுமுக நாவலரை ஏற்றுக்கொள்கிறார்கள். மலையகத் தமிழரோ அவரை அந்நியராகக் கருதுகிறார்கள்.

அரசியலிலும் இவ்விரு மக்களும் இருவேறு ஸ்தாபனங்களில் அணிதிரள்கிறார்கள். மலையகத் தமிழ் தலைவர்களின் தலைமையை அவர்கள் ஏற்கவில்லை. அதேபோல அவர்களது தலைவர்களை இவர்கள் ஏற்கவில்லை. வடக்கு, கிழக்கு குடியேறியுள்ள மலையக தமிழர் கூட மலையகத் தலைவர்களின் கீழ் ஐக்கியப்படுவதை தெளிவாக அவதானிக்கலாம்.

எனவே கலாச்சார, மொழி அரசியல் தொடர்புகள் கூட இருசாராரையும் இணைக்கவில்லை. மாறாக இந்தத் துறைகளில் கூட இரு சாராரினதும் தனித்துவங்கள் பேணப்படுகின்றன.

இந்த பத்துக்காரணிகளும் மலையகத் தமிழரை ஏனைய தமிழ் தேசிய இனத்திலிருந்து பிரித்துக்காட்டும் தனியான மனோ பாவத்தை, தனியான கலாச்சாரத்தை உருவாக்கி தனியான தேசிய இனமாக அவர்களை தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

சிலர் ஒரே மொழியைப் பேசும் பல தேசிய இனங்கள் ஒரே நாட்டிற்குள் இருக்க முடியுமா என வினா எழுப்புகின்றனர். இது ஒன்றும் புதுமையானதல்ல. இலங்கையில் மாத்திரம் காணப்படும் புறம்போக்கு அல்ல.

இந்தியாவில் வாழும் சீக்கியரும், ஜெயின்களும் மொழியால் பிற மக்களிடமிருந்து வேறுபடவில்லை; மத அடிப்படையான கலாச்சாரமே அவர்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.

கலைமன்டனில் — *Kalaimantan* — வாழும் டயாக்குகளையும் *Dayaks* — பூனக்களையும் — *Punas* வேறுபடுத்திக் காட்டுவது மொழி அல்ல. ஒரே மொழியைப் பேசும் அவர்களை பொருளாதார வாழ்வினால் மாறுபடும் கலாச்சாரமே வேறுபடுத்துகிறது.

சீனாவிலே சீனர்களிலிருந்து ஹுய்ஸ் ( *Huis* ) மக்களையும் பிலிப்பைன்சில் வாழும் மொரோ ( *Moro* ) மக்களையும் பிரித்துக் காட்டுவது மொழி அல்ல. மதத்தால் உருவான இஸ்லாமிய கலாச்சாரமே இலங்கை முஸ்லீம்களை தனியான தேசிய இனமாக காட்டுவது அவர்களது கலாச்சாரமே.

எனவே மலையக மக்கள் இலங்கையின் தனியான ஒரு தேசிய இனம். இந்த யதார்த்த உண்மையை மறுப்பது மலையக மக்களின் தேசிய உரிமையை மறுத்து அவர்களை கலாச்சாரத்தில் மேம்பட்ட ஏனைய தமிழ் தேசிய இனத்திற்கு அடிமைப்படுத்தும் சூழ்ச்சியாகும்.

இவ்வாறு கூறும்போது "இது தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் நயவஞ்சகமான சூழ்ச்சி" என சிலர் உரத்த குரலில் ஓலமிடுவார்கள். "ஐயோ! தமிழினத்தை இவ்வாறு சிதற விடுவதா?" என சிலஇன ஆதிக்கவாதிகள் கர்ஜிப்பார்கள். இவர்களுக்கு சுருக்கமாக இனி விடை கூறுவோம்.

"ஒற்றுமையைபற்றி ஓங்காரமிடும் எனதருமை கனவான்களே! உங்களிடம் ஒரு கேள்வி, "நீங்கள் மதிப்பிற்குரிய அமைச்சர்" சிறில் மத்யூ பேசுகின்ற "சிங்கள தமிழ் ஐக்கியத்தை" ஆதரிக்கிறீர்களா? நிச்சயமாக ஆதரிக்க மாட்டீர்கள். ஏனெனில் அந்த ஐக்கியம் கழுத்தை நெரிப்பவனுக்கும், வேதனையால் துடிப்பவனுக்குமிடையிலான ஐக்கியம், தூக்கிலிடுவோனுக்கும், தூக்கிலே தொங்குபவனுக்குமிடையிலான ஐக்கியம், குதிரையிலே சவாரி செய்பவனுக்கும் குதிரைக்குமிடையிலான ஐக்கியம், அந்த "ஐக்கியத்திற்கு" "துப்பாக்கி முனையிலே தேசிய அடக்குமுறை" என்ற ஒரே ஒரு பொருள் மாத்திரமே உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள்,

இன்று "மதிப்புக்குரிய" சிறில் மத்யூ மாத்திரமல்ல சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எவர் வந்து "ஐக்கியத்தைப்" பற்றி பேசினாலும் நீங்கள் அவர்மீது அவநம்பிக்கையே கொள்வீர்கள். "முதலில் நாம் முகங்கொடுக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுங்கள்! தேசிய சமத்துவமும் நியாயமும் வழங்கப்பட்ட பின்னர் ஐக்கியத்தைப் பற்றிப் பேசுங்கள்!" என்றுதான் அவருக்குக் கூறுவீர்கள்.

அதே சமயம் "தமிழ் தேசிய இனத்திற்கு தனிநாடு கோரும் உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நாம் மதிக்கிறோம். தனிநாடு கோருகிறார்கள் என்பதற்காக அவர்களது கழுத்தை நெரிப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது! சிங்கள மக்களுக்கு வழங்கப்படும் விஷேட சலுகைகளை நிறுத்துங்கள்! இலங்கையிலுள்ள சகல தேசிய இனங்களுக்கும் சமத்துவ உரிமை வழங்குங்கள்!" என சிங்களத் தலைவர் ஒருவர் கூறினால் அது உங்கள் உள்ளத்தைத் தொடும். இத்தகைய

நல்லவர்களுடன் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற நம்பிக்கை உங்கள் மனதில் பிறக்கும். முன்னையவர் ஒற்றுமையைப்பற்றிப் பேசினாலும் யதார்த்தத்தில் ஒற்றுமைக்கு எதிராகச் செயற் பட்டு பிரிவினைக்கு தூபமிடுகிறார். பின்னையவரோ பிரிவினை யைப்பற்றி பேசினாலும் தேசிய இனங்களுக்கிடையே தப்பபிப் பிராயத்தைப் போக்கி உண்மையான தேசிய ஐக்கியத்திற்கு வழி சமைக்கிறார்.

அதுபோலவே இன்று நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து மலையகத்திற்கு வந்து நாம் "ஒரே மொழியைப் பேசுகின்ற ஒரே இனம். நாம் அனைவரும் ஓரணி திரண்டு தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவோம்." என்று தொண்டை கிழிய கத்தினாலும் மலையகத் தமிழர் நீங்கள் பேசும் ஐக்கியத் திற்கும் "மத்யூ" பேசுகின்ற ஐக்கியத்திற்கும் இடையே வித் தியாசம் காணமாட்டார்கள். "சிங்கள ஆதிக்க வாதத்திற்கு எதிராக யாழ்ப்பாண ஆதிக்க வாதத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்கிறீர்களா? உங்களுடன் ஒன்றாக வாழ்வதைவிட, சிங்கள வர்களுடன் வாழ்ந்து அவர் கையால் அடிபட்டு சாகலாம். நீங்கள் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள்!" என்று தான் அவர்கள் முகத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்லுவார்கள்.

அதே சமயம் நீங்கள் அவர்களிடம் வந்து "மலையக மக் களே! நீங்கள் ஒரு தனியான தேசிய இனம். இந்த தனித் துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம், மதிக்கிறோம், உண்மைதான். யாழ்ப்பாண ஆதிக்கவாதம் சிங்கள ஆதிக்க வாதத்தைவிட எந்த வகையிலும் கொடுமை குறைந்ததல்ல. நீங்கள் முதலில் ஒரு தேசிய இனம் என்ற முறையில் ஒன்றுபடுங்கள். இன்று யாழ்ப்பாண ஆதிக்கவாதமல்ல உங்கள் பிரதான எதிரி. உங் களைப்போன்றே நாமும் இன்று ஒடுக்கப்படுகிறோம். எனவே நாம் இணைந்து தேசிய உரிமைக்காகப் போராடுவோம். ஆனால் எந்த காரணத்திற்காகவும் நீங்கள் ஒரு தனி ஸ்தாபனத்தில் ஒன்று திரண்டு உங்கள் தனித்துவத்தை பாதுகாக்கத் தவறா தீர்கள். இல்லையேல் நாளை நீங்கள் சிங்கள ஆதிக்க வாதத்தி லிருந்து விடுபட்டு யாழ்ப்பாண ஆதிக்க வாதத்தினால் ஒடுக்கப் படுவீர்கள். *(out of the prying pan into fire)* சட்டியில் இருந்து அடுப்புக்குள் குதித்த கதையாகிவிடும் உங்கள் பாடு.

**வியத்நாம் சீனரின் கதியைப் பாருங்கள் அமெரிக்க ஆக்கிரமிப் புக்கு எதிராக வியத்நாமியரோடு தோளோடு தோள் நின்று வியத்—சீனர் போராடினார்கள். இன்று அதே வியத்—சீனர்களை அகதிகளாக**

"படகு மனிதர்களாக" வியத்நாமியர்கள் விரட்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேகதி மலையகத் தமிழருக்கும் ஏற்படலாம். அன்று வியத் — சீனர் தமது தனித்துவத்தை இழக்காமல் தமக்கென தனி ஸ்தாபனம் என்ற ஒன்றை அமைத்துக்கொண்டு பொது எதிரிக்கெதிராக போராடி இருந்தால் இந்தக்கதி அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. வியத்—சீனர் விட்டதவறை மலையகத் தமிழராகிய நீங்கள் விடக்கூடாது. எனவே மலையகத் தமிழ் மக்களே! உங்கள் தனித்துவத்தை இழக்காத விதத்தில் யாழ்ப்பாண ஆதிக்கவாதத்திற்கெதிரான விழிப்புணர்ச்சியைத் தளர்த்தாத முறையில் பொதுவான நலனை முன்வைத்து எம்மோடு ஐக்கிய முன்னணிக்கு வாருங்கள்! என அறைகூவல் விடுத்தால் அந்த அழைப்பு அவர்களின் உள்ளத்தைத் தொடும். அப்போதுதான் ஐக்கிய முன்னணிகூட சாத்தியம்.

அன்புக்குரிய கனவான்களே! வடக்கு கிழக்கு மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என பிரகடனம் செய்யும்போது அது சிங்கள மக்களுக்கு எதிரான யுத்த பிரகடனம் என சிங்கள ஆதிக்கவாதிகளே கருத முடியும். உண்மையில் இந்த யதார்த்த உண்மையை அங்கீகரித்த தேசிய ஒடுக்கு முறைக்கும் தாம் அனுபவிக்கும் விஷேட சலுகைக்கும் எதிரான சிங்கள மக்கள் குரல் கொடுப்பது தான் உளப்பூர்வமான சுயமான நிர்ப்பந்தமற்ற ஐக்கியத்திற்கு அடிப்படையாக அமையும். அது போன்றதுதான் மலையகத் தமிழரை தனி தேசிய இனமாக அங்கீகரிப்பதுவும்.

## அத்தியாயம் மூன்று

### I. மலையகத் தமிழர் இந்தியா செல்வதே சமூக பாதுகாப்பு என்ற கோஷம்........

இந்த கோஷம் யாரால் முன் வைக்கப்படுகின்றது. இந்த கோஷத்தின் சமூக, பொருளாதார அடித்தளம் யாது? ஆகிய விடயங்களை முதலில் ஆராய்வோம். மலையகத் தமிழர் என்றதும் ஒரு சிலர் இவர்கள் அனைவருமே தோட்டத் தொழிலாளரே எனத் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் மலையகத் தமிழரை ஆறு வகைப்படுத்த வேண்டும்.

(I) தோட்டத் தொழிலாளர் :- தேயிலை, இறப்பர், கொக்கோ, கோப்பி, தென்னை ஆகிய பெருந் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இப்பிரிவில் அடங்குவர். (II) நகரத் தொழிலாளரும் ஏனைய தொழிலாளரும் :- நகர சுத்திகரிப்பு தொழிலாளர், கடை சிப்பந்திகள், சிறு தோட்டத் தொழிலாளர் ஆகியோர். (III) விவசாயிகள் :- பணக்கார, மத்தியதர, வறிய விவசாயிகள் ஆகியோர்; (IV) உத்தியோகத்தரும், படித்த வாலிபரும் :- ஆசிரியர், அதிகாரிகள், வக்கீல்கள், குமாஸ்தாக்கள், மருத்துவர்கள், தோட்ட சேவையாளர் ஆகியோர். (V) நிலவுடமையாளர். (VI) வர்த்தகர்கள்.

இதில் சுமார் 90% வீதமான மக்களான தோட்டத்தொழிலாளர், நகர, ஏனைய தொழிலாளர், மத்தியதர—வறிய விவசாயிகள் ஆகியோரிடம் மூலதனம் ஏதும் கிடையாது. ஏனைய 10% வீதத்திற்கும் குறைவானவர்களான வர்த்தகர்களிடமும், பணக்கார விவசாயிகளிடமும் பெரும் உத்தியோகத்தரிடமும் பெரும் நிலவுடைமையாளரிடமும் கையில் மூலதனம் இருக்கிறது. இவர்கள் படுமோசமானவர்கள். அரசியல் விழிப்புணர்ச்சி இல்லாதவர்கள். எதிர்காலத்தில் இந்தியா சென்று குடிஅமர்வது என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு மலையகத் தொழிலாளரையும் விவசாயிகளையும் ஈவிரக்கமின்றி மூர்க்கமான முறையில் சுரண்டி சேகரித்த செல்வத்தின் ஒரு பகுதியை இந்தியாவிற்குக் கடத்தி அங்கு வர்த்தகம் தொடங்க தயாரிப்பு செய்கிறார்கள். சிலர் ஏற்கனவே இந்தியா போய் வியாபாரம் தொடங்கி விட்டார்கள். இன்னும் பலர் இந்தியாவிலும், இலங்கையிலும் சம காலத்தில் வியாபாரம் செய்து வருகிறார்கள்.

இவர்களிடம் பணம் (மூலதனம்) இருக்கிறது. இவர்கள் இந்தியா அல்ல சந்திர மண்டலம் சென்றாலும் பிழைத்துக் கொள்ள முடியும். பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்து சகல உரிமைகளோடும் சம்பத்தோடும் ஜபர்ஜீக்கள் கொடிகட்டி பறக்க வில்லையா? இலங்கைப் பெரும் முதலாளி உபாலி விஜயவர்த்தன பிரித்தானியாவிலே குதிரை வைத்து ஓட முடியுமானால் மலேசியாவிலே கொக்கோ, தென்னை தோட்டங்களை நடத்த முடியுமானால் மலையகத் தமிழ் முதலாளிகள் இந்தியா சென்று இங்கு வாழ்வதை விட நின்மதியாகவும், சிறப்பாகவும் வாழமுடியும். ஏனெனில் அவர்களிடம் மூலதனம் இருக்கிறது:

அடுத்து படித்த வாலிபர், விஷேடமாக பட்டதாரிகள் இவர்களிடம் பணம் இல்லாவிட்டாலும் படிப்பும், பட்டமும் இருக்கிறது. இந்தியா சென்று நல்லதொரு உத்தியோகமும் பெரிய இடத்தில் பெண்ணும் பெற்று பணத்தை தேடிக்கொள்ள முடியும். இவர்கள்தான் இந்தியா செல்ல வேண்டுமென்ற சித்தாந்தத்தைப் பரப்புபவர்கள் இந்த இரு சாராரும் தமது சுய நலத்தால் கண் மழுங்கிப்போய் தொழிலாளரின், அறுதிப் பெரும்பான்மை மலையகத் தமிழரின் நிலை அறியாமல் இந்தியா சென்றால் பிரச்சினை தீர்ந்து விடும் என ஆசை வார்த்தைகள் கூறுகின்றனர். ஆனால் பாவம் தொழிலாளி.........

அவனிடம் உள்ள ஒரேஒரு சம்பத் அவனது உழைப்பு மாத்திரந்தான். இங்கிருந்து எடுத்துச் செல்லும் சேவைக்கால சகாய பணமும் அங்கு போய் இறங்கிய சில மாதங்களில் கரைந்து விடுகின்றன, அங்கு அவன் மூன்று வீதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறான்.

ஒன்று இலங்கையில் இன்னும் உடல் உழைப்பிற்கு தொழில் சந்தையில் ஓரளவு தட்டுப்பாடு நிலவுகிறது. இங்கு கூலிவேலை செய்தாவது பிழைக்க முடிகிறது. ஆனால் இந்தியாவில் நிலைமை நிலைகீழாகவுள்ளது. அங்கு உடல் உழைப்பிற்கும் கடுமையான போட்டி நிலவுகிறது. அந்தளவு வேலையில்லாத் திண்டாட்டம் அங்கு உக்கிரமாக உள்ளது. அங்கு சாதாரண மூட்டை தூக்கும் தொழிலுக்குக்கூட சண்டித்தனமான தொழிலாளருடன் கடுமையான மோதலுடன் கூடிய போட்டியில் ஜெயிக்க வேண்டியுள்ளது. இரண்டு மலையகத் தமிழருக்குத் தெரிந்ததெல்லாம்தேயிலை, இறப்பர், தென்னைத் தோட்டங்கள். இவர்கள் அங்கு சென்று புதிய காலநிலைக்கும், புதிய சூழலுக்கும், புதிய தொழிலுக்கும் தம்மை பழக்கப் படுத்திக்கொள்ள பெரிதும் சிரமப்படுகிறார்கள். மூன்று, இந்தியாவில் தாம் குடியேறும் பகுதிகளில் வாழும் மக்களை விட இவர்களது கலாச்சாரத்தரம் உயர்ந்ததாகவும், மாறுபட்டதாகவும் இருக்கிறது. எனவே அவர்களுடன் இவர்களால் ஒட்ட முடியவில்லை. இவர்கள் அங்கு "கண்டியான்கள்" என நாமம் சூட்டப்பட்ட ஒரு தனியான தேசிய இனமாகவே வாழ வேண்டியுள்ளது.

இலங்கையில் மலையகத் தமிழ் தொழிலாளி இருவிதமான ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கிறான்:- ஒன்று தொழிலாளி என்ற முறையில் வர்க்க அடக்குமுறைக்கும், இரண்டு, தமிழன்

என்ற முறையில் தேசிய இன அடக்குமுறைக்கும் அவன் உள்ளாகிறுன். இதில் தேசிய அடக்கு முறைக்கும், வன்செயல்களுக்கும் அஞ்சி இந்தியா சென்ருல் பாதுகாப்பாக வாழமுடியும் என்ற நம்பிகையுடன் அங்கு செல்ல நினைக்கிருன். ஆனுல் உண்மையில் அங்கு என்ன நடக்கிறது.

ஒன்று, இலங்கையின் வாழ்க்கைத் தரமும், கலாச்சாரத் தரமும், இந்தியாவை விட உயர்ந்து விளங்குகிறது. இந்தியாவில் இலங்கையை விட வர்க்கச் சுரண்டல் ஒடுக்குமுறை அதிகம். அங்கு மிகமோசமாக, இலங்கையை விடவும் கடினமாக உழைத்து குறைவான வருவாயைப் பெறவேண்டியுள்ளது. இரண்டு, இங்கு தேசிய இன ரீதியான அடக்கு முறைக்கும், வன்செயலுக்கும் அஞ்சி அங்கு சென்ருல் இதற்கு எந்த விதத்திலும் குறைத்துக் கூற முடியாதபடி சாதி அடக்கு முறைக்கும், சாதிவெறி, வன்செயலுக்கும் உள்ளாகிருர்கள். மூன்று, அங்கும் இவர்கள் மாற்ருனுக "கண்டியனுக" மற்ருெரு தேசிய இனமாகத்தான் நடத்தப்படுகிருர்கள்.

இங்கு ஒரு கதையை நாம் நினைவுபடுத்திக் கொள்ளலாம்; நாய் ஒன்று துரத்துகிறது. என்ன செய்வதென சரியான முடிவை எடுக்காத அந்த மனிதன் மிரண்டுபோய் தலைதெறிக்க ஓடுகிருன். மிரண்டு ஓடுபவனைக் கண்டால் கோழையான நாய்க்குக்கூட வீரம் வந்துவிடுகிறது. அது தைரியத்தோடு அவனைத் துரத்துகிறது. அந்த அப்பாவி மனிதன் துணிவை வரவழைத்துக்கொண்டு அசையாமல் நின்ருல் கூட அந்த நாய்க்கு அந்தளவு துணிச்சல் வராது. சற்று அதிகமாகப் போனுல் சடுதியாகக் குனிந்து எதிர்த்துத் தாக்குவதற்காக கல் ஒன்றைப் பொறுக்குவதுபோல பாசாங்கு செய்தால் போதும் அது தலைதெறிக்க மிரண்டு ஓடிவிடும். ஆனுல் அவன் அதுபற்றி எல்லாம் சிந்திக்காமல் வியர்க்க வியர்க்க ஓடிக்களைத்து அருகில் இருக்கும் ஒரு குகைக்குள் ஒளிந்துகொண்டு பாதுகாப்பாக இருப்பதாக ஒரு விஞடி நினைக்கிருன். மறு விஞடி, அக்குகையில் மறைந்து கிடக்கும் பயங்கரச் சிறுத்தை வெளிபட்டு அவனை விழுங்க வாய்பிளக்கும் சமயத்திலேதான் அவன் திகைக்கிருன்.

இதே கதிதான் இந்தியா செல்பவர்களுக்கும் தேசிய இன ஆதிக்க வாதிகளால் கட்டவிழ்த்து விடப்படும் வன்செயலுக்குப் பயந்து இந்தியா ஓடுபவர்களை விழுங்க வாய் பிளந்து நிற்கும் சாதிவெறியின் கோரத்தாண்டவத்தைப் பின்வரும் புள்ளிவிபரம் உணர்த்துகிறது.

* தீண்டாமைக்கு எதிராக 1950ல் இந்தியா சட்டம் இயற்றியது. ஆயினும் 1977 முதல் 80 வரையிலான 3 வருட காலத்தில் உத்திர பிரதேசத்தில் மாத்திரம் சுமார் 18,000 வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் சுமார் 1,300 ஹரிசனர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

* கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே சாதிக்கலவரம் உக்கிரமடைந்துள்ளது. ஆர்காடு மாவட்டத்தில் மாத்திரம் 3000க்கும் அதிகமான உயர்சாதி வெறியர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலினால் 200க்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகின.

* சாதி அடக்குமுறையில் இருந்து தப்புவதற்காக ஹரிசனங்கள் பெருமளவில் பிறமதத்தை தழுவி வருகின்றனர். இந்த மதமாற்றம் இன்று இந்தியா எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாக வளர்ந்துள்ளது. இவ்வாண்டு பெப்ரவரி 19ந் திகதி திருநெல்வேலியில் மாத்திரம் 143 குடும்பங்களைச் சேர்ந்த 558 பேர் இஸ்லாத்தைத் தழுவினர்.

* தற்போது தமிழ்நாட்டில் மதமாற்றத்தைத் தடுப்பதற்கான சட்டத்தைப்பற்றி பெரிதும் பேசப்படுகிறது.

ஆதாரம்: பீஜிங்ரிவீயூ செப். 28, 1981

மலையகத்தின் வசதிபடைத்த விரல்விட்டு எண்ணக்கூடிய நபர்களாலும், படித்த வாலிபர்களாலும் தூண்டிவிடப்பட்ட ஆசை வார்த்தைகளை நம்பி இந்தியச் சினிமாக்களில் வரும் சொர்க்க பூமிதான் இந்தியா, அங்கு சென்றால் சகல சௌபாக்கியங்களும் பெற்று சுகமாக வாழலாம் என்ற நப்பாசையுடன் இந்தியாவை நோக்கும் மலையக தமிழருக்கு உண்மையை புரிய வைப்தற்காக சில புள்ளி விபரங்களை கீழே தருவது பொருத்தமாக இருக்கும்.

இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் 100 குழந்தைகள் சத்துணவு கிடைக்காமையால் முதலாவது பிறந்த தினத்தைக் கூட காணப் பிழைத்திருப்பதில்லை. மொத்தக் குழந்தைகளில் 3/1 பகுதியினர் 52 வயதிற்கு முன்னமே இறந்து விடுகின்றன.

இந்திய சனத்தொகையில் படிப்பறிவு பெற்றவர்கள் 10% வீதமே. இது ஓரளவுக்கு எழுதத் தெரிந்த வரையும் உள்ளடக்கிய தொகை கடந்த 20 ஆண்டுகளில் மக்கள் தொகை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனல் படிக்கத் தெரிந்தவர் எண்ணிக்கை 7 வீதமே அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு 30 நிமிடத்திற்கும் இந்தியாவில் ஒரு கொலை நடக்கிறது. இந்தியாவின் குற்றச் செயல்களுக்கு வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவையே பிரதான காரணங்கள்.

இந்தியாவில் உள்ள பிச்சைக்காரர்களின் தொகை சுமார் 3 கோடி. இந்திய கிராமங்களிலுள்ள 6·5 கோடி வசிப்பிடங்களில், 2·96 கோடி ( 44% ) தற்காலிகக் குடிசைகள். இவற்றில் 60% மிக மோசமான நிலையிலுள்ளன. நகரங்களில் 1·2 கோடி பேர் வீடில்லாமல் நடை வீதியில் வசிக்கிருர்கள்.

— நன்றி :- மனிதன்

இத்தகைய இந்தியாவிலே உழைப்பு ஒன்றை மாத்திரம் மூலதனமாகக் கொண்டு சுபீட்சத்தை நாடிச்செல்லும் மலையகத் தொழிலாளர் அங்கிருந்து தாம் படும் அவஸ்தையை கண்ணீராக வடித்து " இலங்கையிலிருந்து உதைவாங்கிச் செத்தாலும் பரவாயில்லை. இங்கு வந்து பட்டினியால் சாகாதீர்கள் ! " என ஆயிரக்கணக்கில் மலையகத்திலுள்ள தமது உறவினருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

மலையகத் தமிழர் இனக்கலவரம் தலைதூக்கும் ஒவ்வொரு தடவையும் இந்தியா செல்லப் பெட்டி படுக்கைகளைத் தயார் செய்வதும், பிரச்சினை தணிந்ததும் " பொறுத்திருந்து பார்ப்போம் " என்ற மனேபாவத்தைக் கடைப்பிடிப்பதும், இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே ஊசலாடும் அவர்களது கண்ணேட்டத்தைக் காட்டுகிறது.

இத்தகைய மக்களிடம் இந்தியா செல்வதே சமூக பாதுகாப்பைத் தேடும் ஒரேவழி எனக் கூறும் சமூகத் துரோகிகளின் பிரச்சாரங்கள் மலையகத் தமிழரின் முன்னுலுள்ள தேசிய உரிமை சம்பந்தப்பட்ட கடமைகளிலிருந்து அவர்களைத் தடுத்து நிறுத்துவதுடன் அவர்களது அரசியல் உணர்வையும் மழுங்கடிக்கச் செய்கின்றன.

பிரித்தானியாவிலிருந்து குடிபெயர்ந்த அமெரிக்கரும், சீனு விலிருந்து குடிபெறர்ந்த மலேசிய சீனரும் இன்று தமது பூர் வீகத் தாயகத்திற்கு திரும்பிச் செல்ல நினைப்பதில்லை. அதே வழியில் தான் மலையகத் தமிழரின் தேசிய பிரச்சினைக்கும் வர லாறு தீர்ப்பு வழங்கியுள்ளது. இச்சமயத்தில் மலையகத் தமி ழர் இலங்கையின் ஒரு தனியான தேசிய இனமாக வாழ்ந்து வளர்வது எவ்வாறு? தம்மையும் தாம் உருவாக்கிய பிரதே சத்தையும் பாதுகாத்து தேசிய சமத்துவத்தை பெறுவது எப் படி? ஆகிய விடயங்களில் அவர்களுக்கு போதனை அளிப்ப தற்கு பதிலாக ஊசலாட்ட மனுேபாவத்தை வளர்ப்பது துரோகமாகும்.

இன்று ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் விரும்பியோ விரும்பாமலோ மலையக தமிழரில் பெரும் பகுதியினர் இலங் கையிலே வாழ்ந்ததாக வேண்டும் அவர்களது கதி என்ன?

வடக்கு கிழக்கு மக்களைப் பாருங்கள், அவர்களும் மலைய கத் தமிழரைப் போன்றே தேசிய இன அடக்கு முறைக்கு உள்ளாகிறுர்கள். வன்செயல்கள் அவர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவர்கள் இந்தியாவுக்கு தப்பி ஓட நினைக்க வில்லையே.

இலங்கை முஸ்லீம்கள் நால்புறமும் சிதறி வாழ்கிறுர்கள். அவர்கள் அராபியாவுக்கு போய்விட நினைக்கவில்லை. இலங்கை யில் இருந்து தமது ஒற்றுமை மூலம் போராடி தம்மை பாது காத்துக்கொள்ளவில்லையா?

ஒரு தேசிய இனம் தனது பாதுகாப்பை இவ்வாறு கோழைத்தனமாக மிரண்டு ஓடுவதன் மூலம்தான் பெறமுடி யுமா? மலேசியாவில் வசிக்கும் சீனரும், இந்தியாவில் நாகா மீசோ மக்களும் எவ்வாறு தம்மைப் பாதுகாத்துக்கொண்டு தேசிய உரிமைக்காகப் போராடி வருகிறுர்களோ அதே வழி யில் நீங்கள் உங்கள் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளப் போகி றீர்களா அல்லது இங்கிருந்து இந்தியாவை நினைத்து ஏங்கியது போல இந்தியா போய் இலங்கையை எண்ணி ஏங்கும் உங்கள் சகபாடிகளைப் போல இரண்டும் கெட்டான் நிலைக்கு உள்ளா கப் போகிறீர்களா?

கோழைகள் கோடிமுறை சாவார்கள். வீரன் ஒருமுறை தான் சாவான்.

## II. வடக்கு கிழக்கிற்குப் போய் குடியேறுவதே பாதுகாப்பைத் தரும் என்ற கோஷம்

வடக்கு கிழக்கு குடிப் பெயர்ச்சிக்கான சமூக பொருளாதார காரணிகளையும், இந்தக் கோஷத்தின் பின்னணியும் ஆராய்ந்துவிட்டு இந்த வாதத்திற்கு விடைகாண்பது பொருத்தமாக இருக்கும்.

றப்பர் தோட்டங்களில் மழைக் காலங்களிலே வேலை குறைவாக இருக்கும் காரணத்தால் றப்பர் தோட்டத்தொழிலாளர் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்குச் செல்வதும் அங்கு நெல் விதைப்பு தொடங்குவதால் வயல்களில் கூலிவேலை செய்வதும் மழைக் காலம் முடிய மீண்டும் றப்பர் தோட்டங்களுக்குத் திரும்புவதும் ஆரம்ப வழமையாக இருந்தது. ஆனால் நிரந்தர குடியேற்றங்கள் நிகழவில்லை.

1958ம் ஆண்டு கலவரம் ஒரு பகுதியினரை அங்கு துரத்தியது. முதன்முதலாக மலையக தமிழரில் ஒரு பகுதியினர் நிரந்தரமாக அங்கு குடியமர்ந்தனர். தர்மாபுரம் போன்ற குடியேற்றங்கள் உருவாகின.

1974—75 காலப் பகுதியில் இந்தப் போக்கு ஒரு திருப்பத்தை அடைந்தது. இக்காலப் பகுதியில் நிலவிய பஞ்சத்தை மலையமக்கள் எளிதில் மறந்துவிட மாட்டார்கள். அதேபோல இக்காலப் பகுதியில் கொப்பேகடுவ நிகழ்த்திய இனவாதத்துடன் கூடிய பெருந்தோட்ட சுவீகரிப்புக்களையும் சுலபமாக மறந்துவிட முடியாது. 'சொய்சி' போன்ற தோட்டங்களில் இருந்து மலையகத் தமிழ் தொழிலாளர் துரத்தி அடிக்கப்பட்டார்கள். போதாக்குறைக்கு வரட்சியும் சேர்ந்து கொண்டது. பலர் தெருத்தெருவாக பிச்சை வாங்கி அலைந்தனர். சிலர் வெவ்வேறு தேயிலை, றப்பர் தோட்டங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இதே காலப்பகுதி வடக்கைப் பொறுத்தளவில் ஒரு செல்வ வளம் பெருகிய காலம். மலையகத்தில் பஞ்சமும், இனவாதமும் தலைவிரித்தாடியபோது வடக்கே பசுமைப்புரட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போதைய அரசாங்கம் உபஉணவுப் பொருள்களின் இறக்குமதியைத் தடைசெய்ததால் வடக்கு மக்களிடையே உப-உணவு உற்பத்திமீது ஆர்வம் பிறந்தது.

'' இனவாத தரம்பிரித்தல் '' காரணமாக பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டோர், உத்தியோகம் கிடைக்காதோர், வியாபாரத்தில் நம்பிக்கை இழந்தோர் அனைவரதும் கவனமும் நிலம் நோக்கிச் சென்றது. இவர்கள் கைகளில் '' மூலதனம் '' இருந்தது அல்லது வட்டிக்கு வாங்க முடிந்தது. ஆனால் ''உழைப்பு'' தேவைப்பட்டது. '' வடக்கே வாருங்கள் கோஷம்'' பிறந்தது.

அதுவரை பாதுகாத்து வந்த தங்க நகைகளை எல்லாம் பஞ்சப்பேய்க்குத் தாரை வார்த்துவிட்டு ஒட்டாண்டியாக பசியால் துடித்துக்கொண்டிருந்த மலையக தொழிலாளியை இந்த கோஷம் கவர்ந்தது. உழைக்கும் கரங்களை மாத்திரமே தனது நிரந்தர மூலதனமாகக் கொண்ட அவன் வடக்கே சென்றான். அவனுக்கு அங்கு தேசிய இன விடுதலை கிடைக்கவில்லை. '' வடக்கத்தையான் '', '' வந்தான் வரத்தான் '' பட்டம் கிடைத்தது. தனது உழைப்பை மிக மோசமான மலிவு விலைக்கு வாங்கும் இரக்கமற்ற முதலாளியை அவன் சந்தித்தான். எப்படியோ அவனுக்கு ஒரு வயிறு கஞ்சியும் கிடைத்தது.

77 வன்செயல் மீண்டும் ஒரு சாராரை அங்கு துரத்தியது. அவர்களில் ஒரு பகுதியினர் அங்கு குடியேறி குடிசைகளில் வாழ்கின்றனர். ஒரு சாரார் இன்னும் அகதிகளாக தெரு ஓரங்களிலும் கிளிநொச்சி மார்க்கெட்டிலும் கிடக்கிறார்கள். கிளிநொச்சி பஸ் நிலையத்திலே இறங்கியதும் அரை நிர்வாணக் கோலத்தில் நின்றபடி '' ஐயா பிச்சை '' என்று கை ஏந்தும் மக்கள் இவர்கள்தான். பலர் அங்கு தமது மானத்தை விற்றுத் தான் வயிறு கழுவுகிறார்கள்.

இந்த துயரக் கதையைக் கூறும்போது இடைநடுவே, அங்கு இதயமும் நல்லெண்ணமும் படைத்த சிலர் சீர்திருத்த தொண்டாற்றி வருவதையும் மலையக தமிழரை மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும் என போதனை செய்து வருவதையும் குறிப்பிடத்தான் வேண்டும். இந்த சேவைகள் யாவும் யுத்தகளத்தில் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றுகின்ற நற்பணிகளைப் போன்ற பயனையே தரமுடியும். ஏனெனில் நாளை ஒரு புறத்தில் யாழ் ஆதிக்க வாதிகளும் மறுபுறத்தில் சிங்கள ஆதிக்க வாதிகளும் வன்செயலை இவர்கள் மீது கட்டவிழ்த்து விட்டால் '' மலையகமே சரணம் '' என்று கூறிக்கொண்டு அவர்கள் அமைத்துக் கொடுத்த குடிசைகளையும் சிறு தோட்டங்களையும் போட்டு விட்டு மீண்டும் மலையகத்திற்கே ஓடி வந்தாலும் ஆச்சரியமில்லை.

" வடக்கே வாருங்கள் " கோஷத்திற்குப் பின்னல் ஐந்து தூண்டு சத்திகள் செயற்படுகின்ற அவற்றை இனி பார்ப்போம். முதலாவதாக, மலையக தமிழ் தொழிலாளியின் உழைப்பை மலிவான விலைக்கு வாங்கும் வடக்கு முதலாளி இந்த கோஷத்தின் பின்னல் இருக்கிருன். இரண்டாவதாக, மலையக தமிழ் அகதிகளின் பெயரைச்சொல்லி வெளிநாட்டு உதவிகளைப்பெற்று பெயரளவில் காசு அடிக்கும் மோசடிக்கும் பல் இதற்குப் பின்னல் இருக்கின்றன. ஒரு நிறுவனம் ஒரு வெளிநாட்டிலிருந்து 4½ கோடி ரூபா நிதியை " மலையக தமிழ் அகதிகளின் " பெயரால் பெற்றது இந்த பணத்தினல் பத்திலொரு பயனைக் கூட மலையகத் தமிழர் பெறவில்லை ! மூன்ருவதாக, " யாழ்ப்பணத்தவராகிய நாம் எமது வீடு சொத்து என்று கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறேம். மலையக தொழிலாளி இழப்பதற்கு எதுவும் இல்லாதவன். துணிந்து போராடுவான். எல்லைப் பகுதிகளில் குடியேற்றினல் அவன் எமது எல்லைகளைப் பாதுகாப்பான் " என சிலர் வெளிப்படையாகவே கூறுகிருர்ககள். வீட்டுக்கு திருடன் வராமல் காவல் புரியும் நாயின் நிலையில் அல்லது நீங்கள் எமக்காகப் போராடுங்கள் தலைமை பொறுப்பையும், வெற்றிக் கிண்ணத்தை ஏந்தும் பொறுப்பையும் நாம் ஏற்றுக் கொள்கிறேம் என எசமானுர் மனேபாவத்துடன் மலையக தமிழரை நோக்கும் இத்தகைய பிரமுகர்கள் இந்த கோஷத்திற்குப் பின்னல் இருக்கிருர்கள். நான்காவதாக, மலையக தமிழர் அனைவரும் அங்கு வந்து குடியேறிவிட்டால் " தமிழ் மண் " பறிபோகாது, எண்ணிக்கை பலம் அதிகரிக்கும், போராட்டம் முன்செல்லும் என நினைக்கும் நல்ல ஆசையும் சிறு குழந்தை அறிவும் படைத்த மனிதர்களும், " பாவம் இங்கு வந்தால் நின்மதியாக இருப்பார்கள் " என அப்பாவித்தனமாக நம்பும் அரசியல் வாதிகளும் இக்கோஷத்தின் பின்னல் இருக்கிருர்கள். ஐந்தாவதாக, ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து பழக்கமில்லாதவர்கள் வன்செயலில் பாதிக்கப்பட்டு வேறு வழியில்லாமல், தஞ்சம் புகவேண்டிய நிர்ப்பந்தத்திற் குள்ளானவர்களும், பாதுகாப்பற்ற பிரதேசங்களில் வாழும் சிற்றுடமையாளர்களும், அத்துடன் இந்தியா செல்ல முடியாது மலையகத்திலும் நின்மதியாக வாழமுடியாது அங்கு சென்ருல் பாதுகாப்பாக வாழ முடியும் என குழைந்தைத்தனமாக நினைப்பவரும் இதற்குப் பின்னல் உள்ளார்கள்.

" வடக்கே வாருங்கள் " கோஷம் ஒன்று, மலையகத் தமிழரின் தேசிய தனித்துவத்தை முற்ருகப் புறக்கணித்து அவர்களை அகதிகளாகக் கருதி அடைக்கலம் தர முயல்கிறது.

இரண்டாவதாக, வடக்கே ஏதோ பெரிய போராட்டம் நடைபெறுவது போலவும் " நாம் வலிமை மிக்கவர்கள். எம்மை எவரும் அசைக்க முடியாது. உங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமா? வாருங்கள், நாம் அதனைத் தருகிறோம். " என்பது போலவும் இக்கோஷம் ஒலிக்கிறது. இவை எல்லாம் ஒருவகை இறுமாப்புடன் கூடிய ஆதிக்க வாதந்தான். வடக்கிலே பலர் நினைப்பதைப்போல, அப்படி ஒன்றும் பெரிதாக எந்தப் போராட்டமும் நடக்கவில்லை. உண்மை என்னவென்றால் மலையக மக்களை பாதுகாப்பு தேடி வருமாறு அழைப்பிதழ் அனுப்புகின்ற வடக்கிலுள்ள இளைஞர்கள் தங்களுக்குப் பாதுகாப்புத்தேடி மேற்கு ஜேர்மனிக்கு அகதிகளாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவதாக, இன்று மலையகத்திலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் இடம்பெறத் தொடங்கிவிட்டது. இச்சமயத்திலே மலையகத்தமிழரை தமது மண்ணைப் பாதுகாக்கும்படி தூண்டுவதுடன் அதற்கான ஆதரவை நல்குவதற்குப் பதிலாக அவர்களது பிரதேசத்தை விட்டு வடக்கே வருமாறு அழைப்பது இனவாத அரசாங்கத்தின் திட்டத்திற்கு மறைமுகமாக உதவுவதாகும். இந்த காரியத்தைத்தான் வடக்கே வாருங்கள் கோஷம் தன்னையுமறியாமல் செய்கிறது. நான்காவதாக, மலையகத் தமிழர் மலையகத்தில் வாழும்போது சிங்கள ஆதிக்கவாதத்திற்கு மாத்திரமே முகங்கொடுக்கின்றனர். வடக்கே சென்றால் சிங்கள ஆதிக்க வாதத்துடன் யாழ்ப்பாண ஆதிக்கவாதத்திற்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலைமையை இந்த கோஷம் ஏற்படுத்துகிறது.

வடக்கே மாத்திரமல்ல வாஷிங்டனுக்குக்கூட பணம்படைத்தவன் போய் பாதுகாப்பாக வாழமுடியும். யாழ்குடா நாட்டிலுள்ள இருபெரும் ஹோட்டல்களான " சுபாஸ் கபே ", " அசோகா " ஆகிய இரண்டுமே மலையகத் தமிழ் முதலாளிகளுடையவை என்ற உண்மை ஒன்றே இதற்குச் சான்று. ஆனால் தனது இரு கரங்களைத் தவிர வேறு எதுவுமே இல்லாத தொழிலாளிகளின் நிலை என்ன? இதுதான் கேள்வி.

வடக்கு கிழக்கில் மலையகத் தமிழர் குடியேறுவதனால் எதிர்காலத்தில் எழக்கூடிய மூன்று பாரதூரமான விளைவுகளை நாம் முன்கூட்டியே உணரவேண்டும்.

1. யாழ் - மலையக இனக்கலவரம் :- மலையகத் தமிழர் வடக்கே சென்று குடியமர்ந்தாலும் வடக்கு மக்களுடன் இரண்டறக் கலக்காமல் கூட்டங்கூட்டமாக, தனிமக்கட் கூட்டமா

கவோ வாழ்ந்து வருகின்றனர். அதாவது "வடக்கில் வாழும் மலையக தமிழ் தேசிய இனமாகவே" அவர்கள் வாழ்கிறார்கள். அரசியலில் கூட மாறுபட்ட கண்ணோட்டத்தையே இவர்கள் கொண்டிருக்கிறார்கள். இதனால் தேர்தலின்போதுகூட ஒரு மினி யாழ் - மலையக இனக்கலவரம் வெடித்தது. எதிர்காலத்தில் இந்த நிலைமை மேலும் பூதாகாரமாக வளரக்கூடிய சமூக சூழலே காணப்படுகிறது. அதற்கான பொருளாதார காரணி ஒன்று அங்கு நிலவுகிறது. அதனை அடுத்து குறிப்பிடுவோம்.

II. மலையக தொழிலாளருக்கெதிரான யாழ் விவசாயிகள் போராட்டம் மலையக தொழிலாளி அங்கு சென்று குடியேறுவதால் கூலியின் விலை வெகுவாகக் குறைகிறது. மறுபுறத்தில் அங்குள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் வேலை இழக்கின்றனர். இந்த நிலைமை வளர்ந்து ஒரு கட்டத்தை அடைந்தால் அங்குள்ள விவசாயிகள் இவர்கள் மீது போர் தொடுத்தாலும் ஆச்சர்யமில்லை. அசாமில் நடப்பது இங்கு நடக்கலாம்.

III. மலையகம் பறிபோதல் :- அத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டால் மலையகத் தமிழருக்கு காலடி எடுத்து வைப்பதற்குக்கூட ஒரு பிரதேசம் இருக்காது. அவர்களது பிரதேசமான மலையகமே பறிபோனாலும் ஆச்சரியமில்லை.

எனவே, இரு தனித்தேசிய இனங்களை செயற்கையான முறையில் ஒட்டவைக்க நினைப்பது விபரீதமான விளைவையே ஏற்படுத்தும். பொதுவான நலன்களை பெறுவதற்காக இவ் இரு தேசிய இனங்களும் கூட்டுச்சேர முடியும். கூட்டுச்சேரவும் வேண்டும். அதற்காக மலையக மக்களை தமது தனித்துவத்தையும் பிரதேசத்தையும் இழந்துவிட்டு வடக்கே வந்து சங்கமமாகும்படி கூறுவது யாழ் ஆதிக்க வாதத்தின் அப்பட்டமான வெளிப்பாடு. **அவ்வாறு செயற்கையாக இணைப்பது வடக்கு மக்களின் போராட்டத்தையும் ஊறுபடுத்திவிடும்.**

மலையகத்தில் யாழ் மக்கள் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றியிருக்கிறார்கள் இன்று படித்துவிட்டு ஆசிரியர்களாக ஒரு சில வாலிபர்களாவது மலையகத்தில் உருவாகியிருப்பதற்கு அவர்கள் செய்த சேவையே காரணம். ஆனால் இன்று மலையகத்தில் "எமது பாடசாலையில் ஆசிரியர்களாக எமது பிள்ளைகளே வரவேண்டும்" என்ற கோரிக்கை வலுப்பெற்று வருவதுடன் வடக்கு கிழக்கு ஆசிரியர்கள் இங்கு நியமிக்கப்படுவதை

எதிர்த்தும் குரல்கள் எழுகின்றன. இந்தக் கோரிக்கை தவறு ணதென எவரும் கூறமுடியாது. அதுபோலவே நாளை வடக்கின் விவசாயி அங்கு குடியேறும் மலையகத் தமிழருக்கெதிராக இயக்கம் அமைத்தால் அது நியாயமான ஒன்றுகவே இருக்கும். மலையகத்தில் மாதிரி கிராமங்கள் என்ற போர்வையில் சிங்கள வர் குடியேற்றப்படும்போது மலையக தமிழர் எவ்வாறு மனக் குரோதம் கொள்கிறுர்களோ அதே மனத்தாக்கம் மலையகத் தமிழர் வடக்கில் குடியேறும்போது வடக்கு குடிவாசிகளுக்கு ஏற்படத்தான் செய்யும்.

ஒரு வேளை, நாளை வடக்கிலே மலையகத் தமிருக்கெதிராக விவசாயிகள் போராடத் தொடங்கும்போது மலையகத் தமிழர் அங்கு ஒரு "இஸ்ரேல்" நாட்டை உருவாக்க முயலலாம். ஒரு மாறுபட்ட "சியோனிசம்" மலையகத் தமிழர் மத்தியில் உருவாகும் ஆபத்தான பணியையே இந்தக் கோஷம் செய்து முடிக்கப்போகிறது.

## III. மலையகத் தமிழர்களே மலையகம் உங்கள் மண் அதை பாதுகாத்து பலப்படுத்துங்கள்

மலையக மக்களே சுபீட்சத்தைத் தேடி நீங்கள் இந்தியா வில் இருந்து இங்கு வந்தீர்கள். இப்போது சுபீட்சத்தை நாடி இந்தியா செல்வதா, வடக்கு கிழக்கிற்கு குடிபெயர்வதா, என்றெல்லாம் குழம்புகிறீர்கள். இந்த குழப்பம் உங்களை சுடு காட்டுக்குத்தான் அழைத்துச் செல்லும்;

உங்களைப் போன்ற மிக அடர்த்தியாக வாழும் ஸ்தாப னப்பட்ட மக்களை உலகில் மிக அரிதாகவே காணமுடியும். நீங்கள் மனது வைத்தால் உங்கள் மலையகம் ஆம் நீங்கள் உரு வாக்கிய மலையகம் உங்கள் ஒற்றுமையால் உருக்குக் கோட்டை யாக மாறும். எந்தக் கயவரும் அதற்குள் நுழைய முடியாத படி அரண்செய்து காக்கும். ஒரு குரலுக்கு ஓராயிரம் கைகள் சேரும் அற்புதமான சூழலில் வாழ்ந்து கொண்டு பாதுகாப் பைப்பற்றிப் பயப்படலாமா?

மலையகத்தை, உங்கள் பிரதேசத்தை நீங்கள் பாதுகாத் துப் பெலப்படுத்துங்கள். அந்த பிரதேசம் உங்களுக்கு பலத் தையும் பாதுகாப்பையும் தந்து காக்கும். இதுதான் உங்கள்

முன்னுள்ள ஒரே வழி. சரியான வழி. நீங்கள் அடிமைகள் அல்ல, மிருகங்கள் அல்ல, அகதிகள் அல்ல, இந்நாட்டின் தேசிய இனம்.

சுரண்டல் நிலவுகின்ற சகல நாடுகளிலும் பிரச்சினைகள் ஏதோ ஒரு வடிவில் இருக்கத்தான் செய்கின்றன. ஒன்றில் உள்நாட்டில் கலவரம் அல்லது யுத்தம் எப்படி பிரச்சனைக்கு மத்தியிலே தான், அப்பிரச்சனையை தீர்ப்பதற்கான முயற்சியுடன் மனிதன் வாழவேண்டும்.

அமெரிக்காவிலே நீக்ரோக்கள். பிரித்தானியாவில் ஐரிஸ்காரர். பெல்ஜியத்திலே வெலூன்களுக்கு எதிராக பிளமிங் மக்கள் ஸ்பெயினிலே பாஸ்க், கெட்டலன்ஸ், கெலீசியன் மக்கள், கனடாவிலே பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மக்கள், அவுஸ்திரேலியாவிலே அபரோஜின் மக்கள் இப்படி நாகரீக உலகம் இனவாதத்தால் நாற்றமடித்துக் கொண்டிருக்கும்போது, இந்தியாவிலே நாகா மீசோ மக்களும் ஏத்தியோப்பியாவிலே ஏறிற்றிய மக்களும், பிலிப்பைசிலே மொரோ மக்களும், மத்திய கிழக்கிலே பாலஸ்தீனியரும், சைப்ரசிலே துருக்கியரும், ஈரானிலே குர்திஸ் மக்களும் தேசிய உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் மறுபுறத்திலே ருஷ்ய ஆக்கிரமிப்புக்கெதிராக ஆப்கனிஸ்தான் மக்களும், வியத்நாம் ஆக்கிரமிப்புக்கெதிராக வீர கம்பூச்சிய மக்களும், அமெரிக்கா ஆக்கிரமிப்புக்கெதிராக லத்தின் அமெரிக்க மக்களும் போர் புரிகிறார்கள். இன்னும் தென்னுபிரிக்காவிலே, ஆபிரிக்காவின் பல பகுதிகளிலே, ஆசியாவிலே எல்லாம் தேசிய இன அடக்கு முறைக்கு எதிராக மக்கள் போராடுகிறார்கள்.

எனவே, நீங்கள் தனித்து விடப்பட மாட்டீர்கள். உங்கள் விதியை உங்கள் கரங்களில் பற்றிக்கொண்டு உரிமைக்காகக் குரல் கொடுக்க நீங்கள் துணியும்போது உங்களுக்காகக் குரல் கொடுக்க பல ஒடுக்கப்பட்ட மக்களும் முன் வருவார்கள். இந்நாட்டிலுள்ள சிங்களத் தொழிலாளர் மத்தியில் இருந்து கூட ஆதரவை உங்களால் பெறமுடியும். அதை விடுத்து நாடோடிகளாய், கோஷ்களாய் அலைந்தால் பிரச்சனை வளர்ந்து துரத்தும். ஓடி ஒளிவதற்குக் கூட இடம் இருக்காது. ஆகையால் உறுதியான ஒரு முடிவுக்கு வாருங்கள். இதோ ஒரு உருவகம்:-

இரு கிராமங்கள்: முன்னால் ஒரு ஆறு. அதிலே ஒரு தோணி. அப்பால் ஒரு காடு. ஒரு கிராமத்தில் ஏழைக் குடிசைகளில் வாழும் மக்களைச் சூறையாட ஒரு கள்வர் கோஷ்டி தயாராக

உள்ளது. அடுத்த கிராமத்தில் அமைந்துள்ள அழகிய வீடுகளை யும் தோட்டங்களையும் சுட்டுப் பொசுக்க பின்னால் பெருங் காட்டுத்தீ வானளாவ புகை முட்டிக் கிளம்புகிறது. இப்போது குடிசைவாழ் மக்கள் கள்வருக்குப் பயந்து நடுங்குகின்றனர்.

ஒருவன் சொல்கிறான்; " அந்தத் தோணியில் ஏறி அப்பால் உள்ள காட்டிற்குச் சென்று விடுங்கள் " என்று. பார்வைக்கு அழகாகத் தெரியும் அந்தக் கானகத்தில் ஆபத்தான விலங்கு களும், படமெடுத்தாடும் பயங்கர நச்சுப் பாம்புகளும் மறைந் திருக்கின்றன. துப்பாக்கியோடு சென்றால் சுவையான மாமி றைச்சி கிடைக்கும். மக்களோ நிராயுத பாணிகள். உள்ளதோ ஒரு தோணி. அனைவராலும் அங்கு செல்ல முடியாது. அப்படிச் சென்றாலும் பிரச்சினைகள் தீராது. இதுதான் இந்தியா.

இன்னொருவன் சொல்கிறான்: " அதோ அந்தக் கிராமத் தைப் பாருங்கள். அழகான வீடுகள், அற்புதமான தோட்டங் கள். தோட்டக்காரரர் மிகவும் நல்லவர், வல்லவர், நம்மை அங்கு அன்புடன் அழைக்கிறார்," என்று அங்கு சென்றாலோ அந்த தோட்டக்காரரர் அவர்களை கூலி அடிமைகளாக்கி விடுவார். காட்டுத் தீயை அணைப்பதற்கு அஞ்சும் அந்த மனிதர் வரு வோரை அடக்க கையில் வேறு சாட்டை வைத்திருக்கிறார். இதுதான் வடக்கு கிழக்கு.

மற்றொருவன் கூறுகிறான்: ஒன்று படுங்கள். கோழைத்தனத் திலிருந்து விடுபடுங்கள். நாடோடிகளாய் அலைந்து திரிந்தது போதும். கொள்ளையர் தாக்க வந்தால் பதிலடி கொடுத்து ஓடோட துரத்தி அடியுங்கள். உங்கள் கிராமத்தைப் பாதுகாத் துப் பலப்படுத்துங்கள் பாதுகாப்பாக வாழ்வீர்கள் " இது மலையகம்.

இதில் யார் சொல்லுவதை நீங்கள் கேட்பீர்கள்? இதை மலையக மக்களே நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். " நோயுள்ளவனே மருந்தை அருந்த வேண்டும்." எந்த மருந்தை கை எடுக்கப் போகிறீர்கள்? அது தான் கேள்வி. தலைவலியைப் போக்கி வயிற்று வலியைத் தரும் சுலபமான பத்தியங்களற்ற மருந்தையா? கசப்பாக இருந்தாலும் பத்தியம் பல காத்தாலும் நிரந்தரமாக நோயைத் தீர்க்கும் மருந்தையா?

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 9 | போதனைப் புரிகின்றனர் | போதனை புரிகின்றனர் |
| 2 | 3 | 6 | ஏகாபத்திய | ஏகாதிபத்திய |
| 3 | 2 | 1 | நீக்டோயிட் | நீக்ரொயிட் |
| 3 | 4 | 1 | இணைப்பு | ( அதனை நீக்கி விடவும் ) |
| 6 | 3 | 2 | இத்தயை | இத்தகைய |
| 10 | 4 | 9 | *ephemerat* | *ephemeral* |
| 11 | 1 | 4 | கலாச்சாரம் | கலாச்சாரத்தைப் |
| 12 | 4 | 2 | *busis* | *basis* |
| 12 | 4 | 2 | *tenitory* | *territory* |
| 13 | 2 | 3 | பிரதேசத்தில் வைத்திருக்கும் | பிரதேசத்தில் சிறை வைத்திருக்கும் |
| 13 | 3 | 3 | எளுப்பப் | எழுப்பப் |
| 13 | 5 | 9 | பையித்தியக்காரனின் | பைத்தியக்காரனின் |
| 13 | 5 | 14 | நீக்கிரோக்களுக்கும் | நீக்ரோக்களுக்கும் |
| 14 | 2 | 5 | குடிப்பெயரச் | குடிபெயரச் |
| 17 | 5 | 1 | 1697 ல் | 1897ல் |
| 17 | 5 | 2 | ஆசிய | ஆகியன |
| 20 | 5 | 1 | மக்கள் | மக்களை |

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 20 | 6 | 2 | கெலிடோனியர் | செலிடோனியர் |
| 23 | 3 | 1 | *Mioced* | *Mixed* |
| 28 | 3 | 4 | அனைவருமே | அனைவரும் |
| 29 | 3 | 9 | நின்மதியாகவும் | நிம்மதியாகவும் |
| 37 | 1 | 2 | சத்திகள் | சக்திகள் |
| 37 | 1 | 7 | பெயரளவில் | ( அதனை நீக்கிவிடவும் ) |
| 37 | 1 | 27 | நின்மதியாக | நிம்மதியாக |
| 37 | 1 | 34 | நின்மதியாக | நிம்மதியாக |
| 37 | 1 | 35 | குழைந்தைத்தனமாக | குழந்தைத்தனமாக |
| 39 | 2 | 2 | போராட்டம் | போராட்டம் :- |
| 41 | 3 | 1 | ஐரிஸ்காரர் | ஐரிஷ்காரர் |
| 41 | 4 | 7 | கோளைகளாய் | கோழைகளாய் |
| 41 | 7 | 7 | பிரச்சனை | பிரச்சினை |
| முன் அட்டை உட்பக்கம் பந்தி 3 வரி 2 | | | சமர்ப்பித்ததும் | சமர்ப்பித்தும் |
| பின் அட்டை உட்பக்கம் வரி 3 | | | வாசனைப் பொட்கள் | வாசனைப் பொருட்கள் |

EVELYN RUTNAM INSTITUTE JAFFNA
270
REFERENCE LIBRARY

★ சகல விதமான ★

றெடிமேற் உடுப்புகள், துணிவகைகள்,

வாசனைப் பொருட்கள், அறிவியல் ஏடுகள்,

மர்ம நாவல்கள் சகலவற்றிற்கும்

— நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் —

# பஞ்சலிங்கம் ஸ்ரோஸ்

பிரதான வீதி, தலவாக்கொல்லை,

தொலைபேசி இல. 286.

★ வாய்க்கு இதமான ★

உணவு வகைகள, சிற்றூண்டி வகைகள்,

மற்றும் பலவகை தின்பண்டங்களுக்கு

மலையகத்தில் தலைமை ஸ்தானம் வகிப்பது

# "சாரங்கா ஹோட்டல்"

விஷேச வைபவங்களுக்கு சிறந்த முறையில் எந்த ஓடரும்
சிக்கனமாக ஆஞல் பொலிவாகவும் சுவையாகவும்
செய்து கொடுக்கப்படும்.

பிரதான வீதி, : : தலவாக்கொல்லை.

உள்ளே......

★ மலையக மக்களின் நாடு எது ?

★ இவர்கள் தனியான ஒரு தேசிய இனமா ?

★ இந்தியா செல்வதா ?
வட கிழக்கிற்கு குடிபெயர்வதா ?
மலையகத்தில் நிலைத்து வாழ்வதா ?

★ பல்வேறு நாடுகள், தேசிய இனங்களை ஒப்பிட்டு விஞ்ஞான ரீதியில் விடைபகர முயல்கிறது.